(Registered as a Newspaperin Ceylon)
P. M G. No. H. A. 59/300 of 1939.

உ
சிவமயம்.

விரோதி ஸு (1889) ஆவணி ஸ்ரீ
உ௮ உ ஆரம்பமானது

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

**பத்திரக்கிரயம்**

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசங்கஎல்லைக்குள்
தமிழ் ரூபா 5.00 — இங்கிலீசும் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 — இங்கிலீசும் தமிழும் 12.00
தொலைவாய்ப்பகுதி 9.00 — இங்கிலீசும் தமிழும் 13.00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமனுப்பினாலன்றிக் கவனிக்கப்படமாட்டா.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

—அப்பர் சுவாமிகள்

**விளம்பர [...]ம்**

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10-00 [...]கலம் ரூபா 5-50
காற்கலம் ரூபா 4-00 [...]குலம் ரூ. 1.00
அடுத்தமுறைகட்கு மேற்ப[...]ங்களிற்பாதி
காலம் நீடித்த விளம்பரங்க[...]உ விளம்பரங்கள்
விஷயத்தில் மனேஜரிடம் நே[...]டனும் எழுத்து
மூலமாகவேனும் ஒழுங்கு [...]ம். உடன்பணம்
அனுப்பப்படா விளம்பரங்கள் [...]மாட்டா.

புத்தகம்—ருக — யாழ்ப்பாணம்:— பிரமாதி ஸு ஆனி ஸ்ரீ உசு உ (1939 ஜூலை 10 திங்கட்கிழமை) [...]க்கம் உசு

# பண்டைக்காலத்தண்டமிழ்உழவர்

[உக்கடை வி. சிவக்கொழுந்து]

“மேழிச் செல்வம் கோழைபடாது” என்பது ஆன்றோர் திருவாக்கு.

இம் மலர்தலை யுலகின்கண்ணே பன்னெடுங்காலமாக நாகரிகத்தில் தலைசிறந்து விளங்கிய நாடு நம் இந்திய நாடு. இது பலரும் தேர்ந்த உண்மை. அதனும் இவ்விந்திய நாட்டின் தென்பகுதியாகிய தமிழ்நாடு இயற்கைவனப்பின் எழில் நலம் மிக்கதொரு நிலமாக வெப்பமும் தட்பமும் மிகாமலும் குறையாமலும் என்றுநான்றும் ஒருசேர்த்தாய்ப் பல்வளமும் கொழித்து வருகின்றது. மக்கட் கூட்டத்தினர்க்குத் தோற்றமாயிருந்ததும் இத் தமிழ்நாடென்லே ஆன்றோர் பலர் கூறி வருகின்றனர். ஆதியில் மக்கட்கூட்டத்தினர் காய்கனி கிழங்குகளை உணவாகவுண்டு உடுக்க உடையின்றி மரங்களினடியிலும் குகைகளிலுன்னேயும் தங்கித் தம் வாழ்வை நடத்திவந்தனர். காலம் செல்லச் செல்ல நாகரிக முதிர்ச்சிக்கேற்ப மக்கள் தங்களில் பயிர்த்தொழில் செய்து தங்கள் உணவைச் சீர்திருத்திக் கொள்ளவும் குடியிருத்தற்கு வீடுகளை அமைத்துக் கொள்ளவும் உடுப்பதற்கு ஆடையை செய்து கொள்ளவும் தொடங்கினர். அங்ஙனமாக அவர்தம் நாகரிக வளர்ச்சிக்குத் தொடக்கமாயிருந்தது உழவுத் தொழிலேயாகும்.

மனிதன் காடுகளில் காய், கனி, கிழங்குகளைத் தின்று திரிந்துகொண்டிருந்த காலத்தே அக் கனி கிழங்குகள் மண்ணுட் புதையுண்டு அவை தமக்கேற்ற மழை பெய்யுங்காலத்து முளை தோன்றி வளர்தலையும் பின்னர் அவை மரம் செடிகொடிகளாக முற்றிப் பயன் தருதலையும் ஊன்றிக் கவனித்திருத்தல் வேண்டும். பகுத்தறிவுடைய மனிதன் தவ்லூன்றிய கவனத்தின் பயனாகத் தானே விதைகளைத் தேர்ந்தெடுத்து நிலத்தைப் பண்படுத்தி அந்நிலத்தில் அவற்றை விதைத்து ஏற்றகாலத்தில் நீர்விட்டு முளைக்கும்படி செய்திருத்தல் வேண்டும். இவ்வாறாக மக்கள் தன் முயற்சியால் தமக்கு வேண்டும் உணவுப் பொருள்களைப் பலவாறு சத் தோற்றுவிக்கலாயினர். இன்றைய உலகிற்றோன்றியுள்ள ஒவ்வொரு விஞ்ஞானப் பொருள்களும் மனிதனது முயற்சியால் விளைந்திருப்பதைக்காண்கின்றோம். எனவே மக்கட் கூட்டத்திற்கு அவர்தம் உயிர் வாழ்விற்கு இன்றியமையாததாய உணவுப் பொருளுக்கென ஏற்பட்ட உழவுத் தொழிலிலிருந்தே நாகரிகம் தோன்றியிருத்தல் வேண்டும்.

இதனைத் திருவள்ளுவ நாயனார்,

“சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்
உழன்றும் உழவே தலை.”

என்று கூறினர்.

மக்களுக்கு உயிர்நாடி போன்றிருப்பதொரு தொழில் உழவுத்தொழிலே அவ் வுழவுத் தொழில் மிகப் பழைய காலத்தொட்டே நம் தமிழ் நாட்டில் மேன்மையுற்று விளங்கி மற்றைய நாடுகளையும் தன் வருவாயால் போற்றிப் பாதுகாத்து வந்தது. உழவுத் தொழிலைச் சிறக்க நடத்தி நாட்டியுள்ள அரசு, படை, குடி முதலிய வெல்லாம் தம்மைச் சூழ்ந்து நிற்கச் செய்வாராயினர் நம் தமிழ் மக்கள் இதனை நம் தெய்வத் திருவள்ளுவனார்,

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.”

என்று கூறுவாராயினர். இற்றைஞான்று பிறநாடுகளிலிருந்து பெருந்திரளாக நெல்முதலான உணவுப் பொருள்கள் குறைந்த விலையில் வந்து நம் நாட்டில் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதே போன்று பிறநாடுகளுக்கு நம நாட்டு உழவுத் தொழிலாக விளைந்த பல்வேறு பண்டங்களும் ஏற்றுமதி செய்யப்பட்ட காலம் பலவாகும்.

இவ்வாறாக உழவால் உலகுக் குயிராயிருந்தமையின் அவ்வுழவர் பெருமக்களின் கழிபெருஞ் சிறப்பைச் செந்தமிழ் வானத்திலே இரு இளஞாயிறெனத் திகழ்கின்ற தொல்காப்பியமும் திருக்குறளும் முதலாகப் பல்வேறு நூல்களும் எடுத்துக் கூறுவனவாயின. ஒரு நாடு நன்னிலை யெய்துதற்கு உணவுப் பொருள் முதலாவதாக நிறைந்திருத்தல் வேண்டும். வேண்டவே அவ்வுணவுப்பொருளைப் படைத்தற்கு உழவுத்தொழில் சிறப்புற்றிருத்தல் இன்றியமையாதது. இவ்வுண்மையைத் திருக்குறளில்,

“தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்
செல்வரும் சேர்வது நாடு.” [விலாச்

என உடன்பாட்டானும்,

“உறுபசியும் ஓவாப் பிணியும் செறு
சேரா தியல்வது நாடு” [பகையும்

என எதிர்மறையானும் மூதற் கண்ணதாக உழவைச் சிறப்பித்துத் திருவள்ளுவனார் கூறுதல் காண்க. இக்குறள்களுக்குப் பரிமேலழகர் எழுதியுள்ள மெய்யுரை அறியத்தக்கது. இன்னும் செந்தமிழ்ப் பெருநூல்களிலே முதன்முதலாகக் கூறப்படுகின்ற நாட்டுச்சிறப்பு நகரச் சிறப்புக்களில் உழவுத் தொழிலையும் உழவர்களையும் பற்றிக் கூறப்படாத நூல் யாதுண்டு? ஏரெழுபது முதலான நூல்கள் முழுதும் அவ்வுழவர்களின் தனிப்பெருஞ் சீரிய சிறப்பினை எடுத்துரைக்க எழுந்தனவேயன்றோ? அக்காலத் தண்டமிழ் மக்கள் அனைவரும் உழவர்களாகவே இருந்ததுமன்றி நாட்டில் அரசு செலுத்திய அரசர்களுக்கு மகட்கொடைக்கு உரியவர்களாகவும் சிறப்புப்பெற்றிருந்தனர். அம் மக்கள் இங்ஙனம் உழவுத் தொழிலைச் சிறந்து நடத்தி அத்தொழிலைத் தமக்கே உரிமையாகக் கொண்டு உலகுபுரந்து வந்ததனாலன்றோ கிழாரெனவும், வேளாளரெனவும், வேளாண் மாந்தரெனவும் பெயர் பெறுவாராயினர். அழுந்தூர்வேள், நாங்கூர்வேள், கொங்குவேளாளர், துளுவவேளாளர், கார்காத்த வேளாளர், சோழிய வேளாளர் எனவும், சேக்கிழார், நிலக்கிழார், குடைசைக்கிழார் எனவும் அவர்கள் சிறப்புப்பெற்றிருத்தல் காண்க. மற்றும் மாங்குடிகிழார், கொச்சியமங்கிழார், அரிசில்கிழார், ஆலூர்கிழார், கோவூர்கிழார், உறையூர்கிழார், ஓடைக்கிழார் எனவும் பெயர்பெற்ற வேளாண் மாந்தரினமை காண்க. அவ்வாறு உரிமை பெற்ற கிழார்கள் பலரும் புலவரா யிருந்ததனும் அறிந்து மகிழற்பாலதன்றோ? அது வன்றி அக்காலத்து எட்டி, காவிதி, ஏனாதி முதலிய சிறப்புப்பெயர்கள் பெற்றவரும், அவ்வேளாண் மாந்தரேயன்றோ?

இனி அத்தண்டமிழ் உழவர் பெருமக்களின் தொழிற்சிறப்பையும் அவர்களது வஞ்சமில்லா அஞ்சா நாகரிக வாழ்க்கையையும் சங்க இலக்கியங்களின் துணையைக் கொண்டு ஒரு சிறிது நோக்குவாம்.

அக்காலத் தமிழ்ப் புலர் பெருமக்கள் உழவர்கள் உலகு புரந்து வருதலை நன்கு அறிந்து தங்களால் பாடப்படும் தீந்தமிழ்ப் பாட்டுக்களில் அவர்களைப்பற்றி மிக அழகாகக் குறிப்பிட்டிருக்கின்றனர். சிலப்பதிகார நாடகாசிரியரான ஆசிரியர் இளங்கோவடிகள்,

“இரப்போர் சுற்றமும் புரப்போர்
உழவிடை விளைப்போர்” [கொற்றமும்
(சிலப் 10: 149)

எனக் கூறியிருக்கின்றார். இக்கருத்து உலகில் ஒப்பற்ற நூலாக விளங்குகின்ற திருக்குறளிலும்,

“பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க்
அலகுடை நீழலவர்.” [காண்பர்

எனப் பொலிவதுகாண்க.

புறப்பாட்டு என்னும் புறநானூற்றிலே வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர் பெருமான் அரசனிடம் தாம் நேரே சென்று நினக்கு எதிராய பகைவரிடத்து நின் பொருகின்ற படை சென்று வென்று வருகின்ற வெற்றிச் செல்வம் யாம் உழுநிலத்தே ஊன்றிய சாலினால் விளைவதாகும். ஆகலின் நீ உழவினை விளைப் போராகிய எம்மை முதலிற் காப்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## திருக்குற்றாலம்
## பண்—குறிஞ்சி

நீலநெய்தறண்சுனைசூழ்ந்த
நீள்சோலைக்
கோலமஞ்ஞைபேடையொடாடுங்
குற்றாலம்
காலன்றன்னைக்காலாற்காய்ந்த
கடவுள்ளெம்
சூலபாணிநன்னகர்போலுந்
தொழுமின்கள்.

—திருஞானசம்பந்த சுவாமிகள்.

# சிவதொண்டர் பெருமை

(நமது காரைநகர் நிருபர்)

காரைநகர் சைவப்பிரசார சபையின் ஆதரவில் மருதடி விநாயகராலயத்தில் ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் தலைமையில் 28-6-39-ந் தேதி புதன்கிழமை பிற்பகல் 6½ மணியளவில் இந்துசாதன உதவிப் பத்திராசிரியர் திருவாளர் க. கி. நடராசன் அவர்கள் “சிவதொண்டர் பெருமை” என்னும் விஷயமாகச் சிறந்ததோர் விரிவுரை நிகழ்த்தினர். அதன் சுருக்கம் பின்வருமாறு:—

சபையோர்களே!

காரைநகர் வாசிகளாகிய நீங்கள் சைவ ஒழுக்கங்களிற் சிறந்தவர்கள். அத்தகைய உங்களுக்கு யான இத்தகைய பொருள்பற்றி ஏதாவது எடுத்துச் சொல்லுதல் மிகையாகும். எனினும், ஆசிரியர் திரு. க. நல்லதம்பி அவர்களின் வேண்டுகோளை மறுக்கமுடியாமையினாலேயே “சிவதொண்டர் பெருமை” என்னும் விஷயத்தைப்பற்றி ஒருசிலவற்றைப் பேச முன்வந்திருக்கின்றேன். குற்றங்களை நீக்கி ஏற்றன கொள்வீர்களாக.

உலகில்வாழ் மக்கள் பல் நோக்கங் கருதிக் கல்வி கற்கின்றனர். ஒரு சிலர் உத்தியோகங் கருதியும், இன்னொரு சிலர் பட்டங்கள் பெறுதல் கருதியும், மற்றொரு சிலர் புகழ்முதலான பல்வேறு லௌகிகப் பயன்களைக் கருதியும் கல்வியைக் கற்கின்றனர். கல்வி எங்களுக்குக் குறித்த ஓர் அளவுக்கு உதவி புரியுமேயன்றிக் கல்வியினால் மாத்திரம் நாம் கடவுளை அடைந்து விடுதல் சாலும் என்று கருதி இறுமாப்பெய்துவோமாயின், நாம் கல்வியினாற் பெறும் உயரிய பலனை இழந்தவர்களாவோம். “கல்வி என்னும் பல்கடற் பிழைத்தும்” என்ற மணிவாசகப் பெருமானின் கூற்றிலிருந்து இந்த உண்மையை நாம் உணர்ந்து கொள்ளலாம். பிறவிப் பயனை நாம் பெற விரும்பினால் மணிவாசகப் பெருமான் கூறியாங்கு “அவனருளாலே அவன்றாள் வணங்கி” இறைவன் திருவருளைப் பெற முயலுதல் வேண்டும். இவ்வாறு இறைவனருளைப் பெற்று இணையற்ற சிவதொண்டு புரிந்து பாக்கியமடைந்தவர்களே சிவதொண்டர்களாவர்.

முற்றத் துறந்த பட்டினத்தடிகளும் பொன், பெண் முதலியவற்றை நினைந்து மக்கள் புலம்புவர்; உருகுவர். ஆயின், இறைவனை நினைந்து உருகுகின்றிலர். இறைவன் திருவருளை நினைந்துருகாத உலுத்தர் உலகில் இருந்தென்? என்று இடித்துக் கூறுகின்றார்.

நாய் ஒன்று காய்ந்த மாட்டெலும் பொன்றைக் கடித்துத் தன் உதட்டிலிருந்து வரும் உதிரத்தைச் சுவைக்கும் இன்பம் போன்று பிறபொருள்களில் இன்பம் இருக்கின்றதெனக் கருதிக் கருதி யாம் உழலுகின்றோம். எவ்விடத்தில் என்றும் உயிர்க்குயிராய் நிறைந்திருக்கும் இறைவனை யறியும் இன்பமே சிறந்த இன்பம்—என்றும் உலவாத இன்பம். அதுவே வேண்டப்படுவது என்பதை உணர்வோமாக. சிவதொண்டர்களோ இறைவழிபாட்டையே உலகிலுள்ள எப்பொருளினும் மேலாக மதித்தொழுகினர். அதனாலேயே அவர் செயற்கருஞ் செயல்கள் புரிந்தனர். தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்ததுஉம், முதலையுண்ட பாலனை அழைத்ததுஉம், எலும்பு பெண்ணுருவாகச் செய்ததுஉம் ஆகிய செயல்கள் நம் சிவதொண்டர் பெருமையைச் செவ்வனே விளக்குகின்றன. நல்லிசைப் புலமை வாய்ந்த மெல்லியலாராகிய ஒளவை மூதாட்டியாரும் “பெரியவை கேட்கின.....................ஈசனோ, தொண்டருள்ளத் தொடுக்கம், தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே” என்று கூறுதல் காண்க.

சிறுத்தொண்ட நாயனார், தம் ஒரே புத்திரனாகிய சீராளனைக் கறி சமைத்து, வந்த சிவனடியாருக்குத் திருவமுது கொடுக்கும் நியதியைத் தவறாது நிறைவேற்றினார். “தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்” என்று ஆணையிட்ட தம் மனைவியைத் தீண்டுதலின்றித் தமது நியதியைக் கைவிடாமலும் அயலறியாதும் திருநீலகண்டநாயனார் வாழ்ந்து வந்தார். இறைவன் திருக்கண்களினின்றும் உதிரம் பெருகியதனால் தன் கண்ணையே இடந்து அப்பி ஒப்பில்லாத புகழும் அருளும் பெற்றுய்ந்தார் கண்ணப்ப நாயனார். இத்தகைய செயல்களைச் செய்ய யான் வல்லவன் அல்லன். யான் உய்யும் வகை எவ்வாறு என்னும் பொருள் படப் பட்டினத்தடிகளும்,

“வாளால் மகவரிந்தூட்ட
வல்லேனல்லன்; மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல்லே
னல்லன்; தொண்டு செய்து
நாளாறிற் கண்ணிடந்தப்ப வல்லே
னல்லன்; நானினிச் சென்று
ஆளாவதெப்படியோ திருக்காளத்தி
யப்பருக்கே”

என்று இறைவனை வேண்டுகின்றார். சிவதொண்டர் பெருமையை எடுத்துக்காட்டி நெக்குநெக்குருகின்றார்.

இறைவனைத் தலைவராகவும் ஆன்மாவைத் தலைவியாகவும் புனைந்து பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன. காதன்மீக்கூர்ந்த தலைவி தன் தலைவனைக் காதலுடன் சென்று அடையுமாற்றால் சிற்றின்பம் பெறுதலும், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் ஆன்மா உண்மையான பதியாகிய சிவபெருமானைக் காதலுடன் சென்றடையுமாற்றால் பேரின்பம் பெறுத

தொடர்ச்சி 7ம் பக்கம்

## வி. கிருஷ்ணசாமி ஐயர்

[மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்]

1

தந்தையார்

கல்வி கற்பது, பொ[illegible]ருள் ஈட்டுவது, உத்தியோகம் ப[illegible]ப்பது முதலிய காரியங்களால் [illegible]ருவருக்கு இக்காலத்தில் [illegible]ண்டாவது இயல்பு. தாம் கற்[illegible] கல்வியைப் பிறருக்குப் பயன்ப[illegible]டி இன்பமளிப்பது, தாம [illegible] பொருளைப் பிறருக்கும் அள[illegible] அளித்து மகிழ்வது, தம்மு[illegible] உத்தியோக சக்தியினால் எளி[illegible]ரையும் முன்னேறச்செய்வது [illegible]ய தன்மைகளைச் செய்பவ[illegible]ன்னும் பெருகிய புகழை[illegible]டகிறார்கள். எவ்வளவுக்கெ[illegible] பிறருக்கு உபகாரமான [illegible] விரிவடைகின்றனவோ [illegible]வுக்கவ்வளவு புகழும் விரிவ[illegible]தம் காலத்தில் தொடங்[illegible] பிற்காலத்திலும் நடை[illegible] ஏற்பாடுகள் செய்த [illegible]ர்கள் இறக்தும் இறவா[illegible]

வி. கிருஷ்[illegible]யர் அத்தகைய புகழு[illegible]ந்த பெரியார். அவர[illegible] அவருக்கு இருக்க பு[illegible]. ஆனாலும் அப்புகழ் பிரகா[illegible]தில மங்கவில்லை; இன்னும் ஒளிவிட்டுக்கொண்டே இருக்கிறது. மயிலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ், வேங்கடரமண வைத்தியசாலை முதலிய ஸ்தாபனங்கள் அவருடைய புகழ் நிலயமாக விளங்குகின்றன.

குற்றத்தைச் சிறிதும் பயமின்றிக் கண்டித்தல் ஒரு நல்லகாரியம் செய்யவேண்டுமென்று தோற்றி அதனை உடனே திருத்தமாகச் செய்தல், எந்தக் காரியத்திலும் ஊக்கத்துடன் முற்படுதல் போன்ற குணங்களுக்குக் கிருஷ்ணசாமி ஐயர் ஒரு சிறந்த உதாரண புருஷராவர். குற்றம் செய்பவர்களும் இழிந்த குணமுடையவர்களும் அவரை அணுகுவதற்கே பயப்படுவார்கள். அவருடைய கருணைச் செயலால் நன்மையடைந்தவர்கள் பலர்.

கிருஷ்ணசாமி ஐயருடைய தந்தையார் வேங்கடராமையரென்பவர் அவர் மிக்க தைரியசாலி. கிருஷ்ணசாமி ஐயருடைய தைரியம் அவருடைய தந்தையாரிடமிருந்து வந்ததென்றே சொல்லலாம். வேங்கடராமையருடைய முன்னோர்களின் ஊர் கன்னிக் தாலுகாவிலுள்ள அரிவிழிமங்கலம் அவர் சீகாழி முதலிய இடங்களில் ஜில்லா முன்ஸிப் உத்தியோகம் பார்த்துவந்தார். ஆங்கிலத்திலும் வடமொழியிலும் சிறந்த பயிற்சியுடையவர். வடமொழியிலுள்ள சைவ கிரந்தங்களில் மிக்க அன்பும் ஆராய்ச்சியுமுடையவராக இருந்தார். வைதிக ஆசார அனுஷ்டானங்களிற் சிறிதும் பிறழாது ஒழுகிவந்தார்; ஒழுக்கநெறி தவறியவர்களைக் கண்டால் அவருக்கு வெறுப்பு உண்டாகும்.

அப்பெரியாரை நான் சில முறை பார்த்துப் பேசியிருக்கிறேன். அவரது முகத்திலே ஒரு பிரகாசம் இருக்கும். அவருடைய தேஜஸும் மனோதைரியமுமே அதற்குக் காரணங்கள். யார் வந்தாலும் தம் வீட்டில் ஆகாரம் செய்வித்து அனுப்புவது வழக்கம். குற்றம் செய்பவர்கள் எவ்வளவு சிறந்த நிலையில் இருந்தாலும், புறத்திலே எவ்வளவு ஆசார அனுஷ்டான சீலர்களாகத் தோன்றினாலும் அவர்களை அவர் மதியார்.

பெரிய பிரசுதாராகிய பிராமணர் ஒருவர் தம்முடைய வயல்களுக்கருகிலுள்ள நிலங்களில் தண்ணீர் பாயவொட்டாமல் தடுத்துவந்தார். அவருடைய இயல்பை வேங்கடராமையர் பலராலும் அறிந்திருந்தனர். ஒரு சமயம் அந்த மிராசுதார் தம்மை அஞ்சலி செய்தபோது வேங்கடராமையர் பிரதி நமஸ்காரம் செய்யவில்லை. உடனிருந்த ஒருவர் அவரைப் பார்த்து "பெரிய மிராசுதாராகிய இவர் அஞ்சலி செய்தபோது தாங்கள் பேசாமல் இருந்துவிட்டீர்களே! ஏன்?" என்று கேட்டார். அதற்கு அவர் 'இவரை நான் நன்றாக அறிவேன். இவர் பல ஜனங்களுக்குத் தீமை புரிபவர். அயோக்கியர்கள் பிரதி நமஸ்காரத்திற்கு உரியரல்லர். ஆகலால் செய்யவில்லை' என்று சொல்லிவிட்டார்.

பெரிய உத்தியோகத்தில் இருந்தாலும் வேங்கடராமையர் உத்தியோக காலத்தைவிர மற்ற வேளைகளில் சிவ சம்பந்தமான நூல்களை ஆராய்வதிலும் வித்துவான்களோடு பழகுவதிலுமே தமது மனத்தைச் செலுத்திக்கொண்டிருப்பர். ஹாதத்த சிவாசாரியார், நீலகண்ட தீக்ஷிதர் அப்பைய தீக்ஷிதர், ஸ்ரீதரவேங்கடேசர் முதலிய பெரியோர்கள் இயற்றிய நூல்களிலும் சிவபுராணங்களிலும் அவருக்கு நல்ல பயிற்சியுண்டு.

திருவிசை நல்லூரிலிருந்த ஸ்ரீ மகாமகோபாத்தியாய ராமசுப்பா சாஸ்திரிகளென்ற பெரியார் விஷ்ணுதத்வரஹஸ்யம் என்று வடமொழியில் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். அதிலுள்ள பல விஷயங்கள் சிவபக்தர்களுடைய மனத்தைப் புண்படுத்தக்கூடியனவாக இருந்தன. அதைப் படித்துப் பார்த்த வேங்கடராமையர் மிகவும் வருத்தமடைந்தனர். அந்தப் புஸ்தகம் முழுவதிலும் சிவத் துவேஷமான வாக்கியங்கள் நிரம்பியிருந்தன. உடனே அவர் அக்காலத்தில் இடையாற்று மங்கலத்தில் இருந்தவரும் நான்கு சாஸ்திரங்களிற் பயிற்சியுடையவராகிய அப்பு சாஸ்திரிகளென்பவரிடம் அந்த நூலுக்கு ஒரு கண்டனம் எழுத வேண்டுமென்று கூறிப் பொருளுதவி செய்தார். அந்த வித்துவான் 'விஷ்ணுதத்த்வ ரஹஸ்ய கண்டனம்' என்று ஒரு புஸ்தகம் எழுதினார். பின்பு, இதனைத் திருவாவடுதுறை ஆதீனகர்த்தராக இருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் இரண்டாயிரரூபாய் உதவி செய்து பதிப்பிக்கச் செய்தார். அந்தப்புஸ்தகம் எல்லோருக்கும் விலையின்றி அளிக்கப்பெற்றது. அப்பால் அந்தக் கண்டன நூலுக்குச் சமாதானம் ஒன்றும் வெளிவரவில்லை.

வேங்கடராமையருக்குப் பத்தினிகள் இருவர். அவருள் மூத்த தாரத்தின் குமாரர்கள் இருவர். அவருள் மூத்தவர் சாமிநாதையரென்பவர். இளையவரே கிருஷ்ணசாமி ஐயர். உத்தியோகஸ்தர்கள் உத்தியோகஸ்தர்களுடைய பெண்களைக் கல்யாணம் செய்துகொள்வதுதான் கௌரவம் என்று யாவரும் நினைத்துவந்த காலம் அது. வேங்கடராமையர் அதை விரும்பவில்லை. திருவாலங்காட்டில் சாஸ்திரவல்லுநரும சீலமுடையவருமாக இருந்த ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகளென்பவருடைய புதல்வியைத் தம் இளைய குமாரருக்கு மணம் செய்வித்தார். இதை நிகழ்ச்சியை அறிந்து சிலர் தமக்குள்ளே குறை கூறிக்கொண்டனர். "உத்தியோகஸ்தர்களுடைய பெருமையும் சிறுமையும் எனக்கு நன்றாகத் தெரியும் எங்கே உண்மைக் கௌரவம் இருக்கின்றதென்பதை நான் செய்தேன்' என்று அவர்கள் அவருடைய தைரியத்தையும் அறிவையும் வியந்து பாராட்டினார்கள்.

## லண்டனில்ஜப்பான் தேயிலை

### 221/2 லக்ஷம் ருத்தல் 5 மாதத்திற்குள் இறக்குமதி

லண்டன் ஜூலை 4

ஜப்பானிய தேயிலை இறக்குமதி சம்பந்தமாக இன்று சாமானிய சபையிற் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு வர்த்தக மந்திரி திரு. ஒலிவர்ஸ்டான்லி பின்வருமாறு பதிலளித்தார்:—

இவ்வருஷம் ஜனவரிமாதம் முதல் மே மாதம்வரை 5 மாதங்களுக்கு ஜப்பானிலிருந்து மொத்தம் 2,250,000 ருத்தல் தேயிலை இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றது.

இம் மொத்தம் இறக்குமதியான தேயிலையில் 1000 த்துக்கு 15 விகிதாசாரம் அளவுள்ளதாகும். ஜப்பானிய தேயிலையிற் குறைந்த ரகமானவை தீர்வையில்லாமல் ருத்தல் 6 பென்னிக்கும், 7 பென்னிக்கும் விற்கப்படுகின்றன வென்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இந்தத் தேயிலை இறக்குமதியைத் தடைசெய்வதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது.

திரு. வில்தார்ன்:—ஜப்பானிய தேயிலையுடன் இலங்கை இந்தியாத் தேயிலைகள் கலக்கப்பட்டு "சாம்ராஜ்யத் தேயிலை" என்று விற்பனை செய்யப்படுவதை மந்திரி அறிவாரா?

திரு.ஸ்டான்லி:—திட்டவட்டமான தகவல்களைக் கொடுத்தால் அதுபற்றி நான் கவனிக்கக்கூடும். ஆனால், இவ்வாறு கடக்கவில்லையென்று தான் எனக்குக் கிடைத்த தகவல் கூறுகிறது. சட்டத்தின் கீழ் நீங்கள் குறிப்பிட்டபடி இருக்கமுடியாது.

மற்றொரு கேள்விக்குத் திரு ஸ்டான்லி பதிலளிக்கையில், இந்தத் தேயிலை "சாம்ராஜ்யத் தேயிலை" என்று கூறப்படுவதில்லை என்று சொன்னார்.


— சகலவிதமான பயிர்களுக்கும் —

**பவாரின் பசளை**

தனிப்பட்டவர்களின் தேவைக்கேற்றவாறு கலக்கப் பெற்ற விசேஷ கலப்புப் பசளை

நெல், புகையிலை, எலுமிச்சை தோட்ட

— முதலிய வகைகளுக்கும் —

தென்னைக்கும் விசேஷ பிரக்யாதி ... பெற்றது ...

எல்லா விபரங்களுக்கும் கீழ்க்காணும் விலாசத்திற்கெழுதுக:—

N.வைத்திலிங்கம் & கொம்பனி, வியாபாரிகள் யாழ்ப்பாணம். அல்லது J.R பாக்கஸ் அவர்கள் வஜன்ற மானிப்பாய்.

(Mis. 82. 10-7-39—9-9-39) (தி)


## பண்டைக்காலத் தண்டமிழ் உழவர்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாற்றுதல் வேண்டும்" எனச் செவியறிவுறுத்தியிருக்கின்றார். அப்பாட்டு,

'பொருப்படை தருஉம் கொற்றமும் [உழுபடை
யூன்றுசால் மருங்கி னின்றதன் பயனே
...........
பகடுபுறந் தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயி னின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே."

என்பதாகும்.

—வரும்.

## ஒல்லாந்து நடுவு நிலைமைதான் வகிக்கும்

பிரிட்டனும் பிரான்ஸும் ஒல்லாந்துக்கு அளிக்கக்கூடிய உறுதிப்பாடுகளை நிராகரித்து லண்டனிலும் பாரிஸிலுமுள்ள டச்சு ஸ்தானிகர்கள் ஜூலை 1-ந் திகதி ஆட்சேபனைக் குறிப்புக்களை அனுப்பியதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒல்லாந்தின் நடு நிலைமையையும் சுதந்திரத்தையும் ஸ்தானிகர்கள் வற்புறுத்தினார்கள்.

# ஆகாயவசனி அறிக்கைகள்

### ஜூலை 11 செவ்வாய்

**மதராஸ் 1**

211 மீட்டர்கள் (வி/1420 கி சை)

டிரான்ஸ்மிஷன் 1

மாலை

குழந்தைகளுக்கு கல்வி ஒலிபரப்பு
4-00 சங்கீதம்
4-03 ரஸமான விஷயங்கள்-தெலுங்கு
4-06 ரேடியோ மாமா மென் வில்லன்களை தெலுங்கு
4-16 ஸ்ரீ வ சேஷகிரிராவ் தக்கடாக்கை
4-20 தெலுங்குக்கோஷ்டிப்பாட்டு மாலை
4-30 முடிவு [விக்க

டிரான்ஸ்மிஷன் 2

5.00 ஸ்ரீமதி ஆர் ப்ருசதாம்பாள் வாய்ப்பாட்டு
6-00 ஸ்ரீ காட் அண்ணாஜிராவ்வாய்ப்பாட்டு
6-30 ஸ்ரீ சுப்ரமணிய ஐயர் புல்லாங்குழல்
6 45 ஸ்ரீ காட் அண்ணாஜிராவ்வாய்ப்பாட்டு
7-15 புதிதாக உருப்படுத்தல் ஸ்ரீ டி டி ராவ் தெலுங்குப் பேச்சு
7-30 ஸ்ரீ என் ஆர் ஸ்ரீனிவாசய்யங்கார் வாய்ப்பாட்டு
8-10 அ இ ரே வித்வான் கோட்டுவாத்தியம்
8-20 ஸ்ரீ என் ஆர் ஸ்ரீனிவாசய்யங்கார் வாய்ப்பாட்டு
8-55 வரலாற்றின் முதற்பதிப்பு ஸ்ரீ வி என் ராமசாமி சாஸ்திரி
9-10 உள்ளூர் வர்த்தமானமும அறிவிப்புகளும
9 15 வர்த்தமானமும் வானிலை விபரமும்
9-30 ஸ்ரீமதி எம் எஸ் சகுந்தலாபாய் வாய்ப்பாட்டு
10-30 முடிவு

**மதராஸ் 1**

60 98 மீட்டர்கள் (வி/4920 கி சை)

டிரான்ஸ்மிஷன் 1

4-00 4 30 மதராஸ் 1-ல் இருக்கிறபடி

டிரான்ஸ்மிஷன் 2

5 00 6.00 மதராஸ் 1-ல் இருக்கிறபடி
6-00 கிராமஜனா தெலுங்கு
6-15 கட்டுப்புவிலை வாசிகளும் அறிவிப்புகளும்
6-20 சால்கடைகளின் வியாதிகள் 1
6-30 ஸ்ரீமதி ஜே ஜனகம்மா சாகித்யக்கதை
6-45 10-30 மதராஸ் 1-ல் இருக்கிறபடி
10-30 முடிவு

**திருச்சினாப்பள்ளி**

397 மீட்டர்கள் (வி/758 கி சை)

டிரான்ஸ்மிஷன் 1

பகல்

2-00 திருவீழிமிழலை சகோதரர்கள் (நாகசுரம இசைத்தட்டு)
2-15 ஜாவளிகள் ஸ்ரீ ஸ்ரீனிவாசஐயர் கோட்டுவாத்தியம ஸ்ரீ நாராயண ஐயங்கார் முசிரி ஸ்ரீ சுப்ரமண்ய ஐயர் பல்லடம் ஸ்ரீ சஞ்ஜீவராவ் புல்லாங்குழல்
2 30 இலங்கைப்பாட்டுகள் (இசைத்தட்டு) மாஸ்டர் ராஜூவும் மிஸ் கமலணி தேவியும் மாஸ்டர் ராஜூ மிஸ் கமலணிதேவி பெண்கள் கோஷ்டிப் பாட்டு மாஸ்டர் லோகைபா மாஸ்டர் சுந்தரமும் இதவர்கள் கோஷ்டிப்பாட்டும மிஸ் கமலணிதேவி
3 00 முடிவு

டிரான்ஸ்மிஷன் 2

6-00 ராமார்த்தா கிசுழ்ச்சிகள் கிராமக் கடைத்தெரு "பானையும் மண்பொம்மைகளும்" கட்டுப்புவிலை வாசிகளும் அறிவிப்புகளும்
6-30 ஸ்ரீமதி என் எஸ் ரங்கநாயகி ஸ்ரீமதி என் எஸ் ருக்மணி வாய்ப்பாட்டு ஸ்ரீனிவாஸாச் சாரியார் சாகித்யங்கள்
7-00 உங்கள் வீட்டுவாசலில் 1 புஸ்தகங்கள் ஸ்ரீ வ பி எஸ் என் வி காடிமுத்துப்பிள்ளை
7-15 ஸ்ரீ கே ஜே நாதன் வீணை
8.00 ஸ்ரீமதி என் எஸ் ரங்கநாயகி ஸ்ரீமதி என் எஸ் ருக்மணிவாய்ப்பாட்டு
8-30 வாத்திய சங்கீதம்
8.45 ஸ்ரீ கே நாதன் வீணை
9-15 ஆங்கிலத்தில் வர்த்தமானம்
9-30 முடிவு

### ஜூலை 12 புதன்

**மதராஸ் 1**

211 மீட்டர்கள் (வி/1420 கி சை)

டிரான்ஸ்மிஷன் 1

மாலை

2 00 இது உங்களுக்கு ரஸமாகவிருக்கலாம்
2-05 கீர்த்திபெற்ற போதிஞர் 6 ஸ்ரீ புர்ரா சுப்ரமண்யம் பேசுவார்
2.10 சங்கீதம்
2-30 முடிவு

டிரான்ஸ்மிஷன் 2

மாலை

4-00 தெலுங்கில் பலரக நிகழ்ச்சிகள் ஸ்ரீ வ சேஷகிரிராவும் ஸ்ரீ பி நரசிம்ம சாஸ்திரியும்
4-30 முடிவு

டிரான்ஸ்மிஷன் 3

5-00 ஸ்ரீ எஸ் சங்கரன் வாய்ப்பாட்டு
5-25 ஸ்ரீமதி தனம்மாள் வீணை
5-30 ஸ்ரீ எஸ் அய்யாசாமி ஐயர் வாய்ப்பாட்டு
6-45 ஸ்ரீமதி டி. ஞானம்பாள்வாய்ப்பாட்டு
7-15 சேனுங்கள்! சேனுங்கள்! 4 நடிகர் ஸ்ரீ எம் கே தியாகராஜ பாகவதர் தமிழ்
7-30 ஸ்ரீமதி டி ஞானம்பாள்வாய்ப்பாட்டு
8-30 ஸ்ரீ பி எஸ் அனந்தராமன் பிடில்
8-55 காட்டுப்புற மனுஷன் ஸ்ரீ ஜி பார்த்தசாரதி ஆங்கிலம்
9-10 உள்ளூர் வர்த்தமானமும் அறிவிப்புகளும
9-15 வர்த்தமானமும் வானிலை விபரமும்
9-30 ஸ்ரீ பி எஸ் அனந்தராமன் பிடில்
10-30 முடிவு

**மதராஸ் 2**

60. 98 மீட்டர்கள் (வி/4920 கி சை)

டிரான்ஸ்மிஷன் 1

2 00 2-30 மதராஸ் 1ல் இருக்கிறபடி

டிரான்ஸ்மிஷன் 2

4 00 4-30 மதராஸ் 1ல் இருக்கிறபடி

டிரான்ஸ்மிஷன் 3

5-00 9-30 மதராஸ் 1ல் இருக்கிறபடி
9-30 ஐரோப்பிய சங்கீதம
10-30 முடிவு

**திருச்சினாப்பள்ளி**

397 மீட்டர்கள் (வி/758 கி சை)

டிரான்ஸ்மிஷன் 1

பகல்

2-00 பாண்டு வாத்தியம் ஜோக்குல் ஹாசெய்னும் அவர் பாண்டும் இம்பீரியல்பாண்டு
2-15 பிவிப்ரவிசர்கள விரும்பும் சங்கீதம் ஸ்ரீ எம் டி பார்த்தசாரதி மின்இந்து பாலா ஸ்ரீ காட் அண்ணாஜிராவ் ஸ்ரீமதி டி என் மாணிக்கம
2 45 வங்கான மெட்டுகள் ஆபோஹி முக்காரியும் கோஷ்டியும் பங்கிம சந்திர கோஷூம் ரஞ்சிதராயும்
3 00 முடிவு

டிரான்ஸ்மிஷன் 2

மாலை

6-00 கிராமாந்தர நிகழ்ச்சிகள் நம்முடைய பழக்கங்கள் "[illegible]கு டிக்கட் எடுப்பது" கட்டுப்புவிலை வாசிகளும் அறிவிப்புகளும்
6-30 ஸ்ரீ எம் ராஜகோபாலசர்மா வாய்ப்பாட்டு
7 00 சமீபத்தில் வெளிவந்தன சிலபுஸ்தகங்கள் ஸ்ரீ எல என எஸ் மணி
7-15 அம்மனயும் உத்தரயும் நாடகம்
7 25 ஸ்ரீ வி எல பார்த்தசாரதி ஐயங்கார் கோட்டு வாத்தியம்
8.00 ஸ்ரீ எம் ராஜகோபாலசர்மா வாய்ப்பாட்டு
8-30 வாத்திய சங்கீதம்
8-45 ஸ்ரீ வி எல பார்த்தசாரதி ஐயங்கார் வாய்ப்பாட்டு
9 15 ஆங்கிலத்தில் வர்த்தமானம்
9 30 முடிவு

### ஜூலை 13 வியாழன்

**மதராஸ் 1**

211 மீட்டர்கள் (வி/1420 கி சை)

டிரான்ஸ்மிஷன் 1

மாலை

4-00 சங்கீதம்
4-03 ரஸமான விஷயங்கள் தமிழ் ரேடியோ மாமா
4 06 பேர்பெற்ற இலக்கிய கர்த்தாக்கள் ஸ்ரீ வ ரா தமிழ்ப் பேச்சு
4-16 தக்கடாக்கள்
4-20 கோலாட்டம் தமிழ்
4 30 முடிவு

டிரான்ஸ்மிஷன் 2

மாலை

5 00 ஸ்ரீ எம் அப்ரஹாம் பாகவதர் வாய்ப்பாட்டு
5-30 ஸ்ரீமதி எஸ் ஸ்வர்ணம்பாள் வாய்ப்பாட்டு
6-00 ஸ்ரீ எம் அப்ரஹாம் பாகவதர் வாய்ப்பாட்டு
6-30 ஸ்ரீமதி என் ஸ்வர்ணம்பாள் வாய்ப்பாட்டு
6-45 "நவீன சகுந்தலா" நாடகம் தமிழ்
7-15 கைத்தொழில் ஆந்திரதேசம் "சர்க்கரை' தெலுங்குப்பேச்சு ஸ்ரீ வி ராமகிருஷ்ண
7 30 ஸ்ரீ வாசுதேவன் காயன் வாய்ப்பாட்டு
8-15 கர்நாடக வாத்தியக்கோஷ்டி
8.25 தக்கடாக்கள் இசைத்தட்டுச் சங்கீதம் ஸ்ரீமதி எஸ் டி சுப்புலக்ஷ்மி ஸ்ரீ எம் டி பார்த்தசாரதி ஸ்ரீமதி வாசவாம்பாள் மாஸ்டர் ராஜகோபாலன்
8-55 நான்கு சர்வகலாசாலைகள் 1 சென்னை சர்வகலாசாலைகள் ஸ்ரீ டி செல்லையா அருமைநாயகம்
9-10 உள்ளூர் வர்த்தமானமும் அறிவிப்புகளும் தொடர்ச்சி 6-ம் பக்கம்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
ஆழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமாதி ஸ்ரீ ஆனிமீ ௨௬ உ திங்கட்கிழமை

## அரசியற்றிருத்தப் பிரேரணை விவாதம்

இலங்கை அரசாங்கசபைத் திருத்தப்பிரேரணை விவாதிக்கத் தொடங்கியது சென்ற மார்ஜ் மீ 9ந் திகதிவரையிலாகும். அப்பொழுது தொடக்கம் இற்றைவரையில் அதாவது நாலுமாசகாலமாக இந்தப் பிரேரணை விவாதம் இடையிடையே நீடித்த நேரம் நடைபெற்று வருகின்றது. இற்றைவரையில் (23நாட்கள் வரையில்) இவ்விவாதம் நடந்துள்ளதெனக் கணக்கிடலாகும். ஆனால், இன்னமும் இது ஒரு முற்றுக்கு வந்தபாடில்லை. இவ்விவாதம் இப்படி நீடித்துவருதற்குக் காரணமும் அவர்கட்குள்ள பூரண அதிகாரமும் ஏனைய தொகையிற் குறைந்த சாதியினர்க்கு ஏதுஞ் செய்துகொள்ள அதிகாரமில்லாமையும் இன்ன பிறவும் இந்தவிவாதம் நேருங்காலத்தில் அறியக்கிடக்கின்றன. இவ்விவாதம் இவ்வளவு நீடித்தகாலத்திற்கு இழுபடக் காரணமென்ன? சிங்கள சபைத்தலைவர்கள் தமக்கு அகப்பட்ட அதிகாரத்தைக் கைவிட மறுத்து நிற்றலும் தொகையிற் குறைந்த சாதியினரைத் தாங்கள் இன்னமும் நசித்து வைத்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கமுமேயாகும். பிரதிநிதித்துவ விஷயத்திலே சிங்கள சாதியார் சனத்தொகைக்குத் தக்கபடி ஐந்தில் மூன்று பங்கைத் தாங்கள் ஏற்றுக்கொண்டு எஞ்சிய இரண்டு பங்கைத் தொகையிற் குறைந்த சாதியாருக்குக் கொடுக்க உடன்பட்டாலும் இந்தவிவாதம் இவ்வளவிற்கு இழுபடமாட்டாது. தொகையிற் குறைந்த சாதியாரும் ஒருவாறு உடன்பட்டு அதனை ஏற்றுக்கொள்வார்கள். சென்ற சில நாட்களாக நடந்த விவாதத்திற் சில பிரதிநிதிகள் பேசியபோது வெளிவந்த உண்மைகள் இற்றைப்பிரசுரத்தில் பிறிதோரிடத்து மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன.

சிங்களப் பிரதிநிதிகளுட் சிலரினுஞ் சிலரொழிய ஏனையோரெல்லாருங் குரங்கெல்லாம் ஒருமுகமென்றபடி. நீதியை நோக்காது கிடைத்தது அறுதியென்று ஒரேமுகமாக நிற்கிறார்கள். சிங்களத் தலைவராகிய ஸேர். பரன் ஜயதிலகை தம்பட்சத்தில் நியாயமில்லையெனக் கண்டுகொண்டும் குதர்க்கம் பேசியபடியே நிற்கின்றார். இப்பொழுது இருக்கிற ஒழுங்கின்படி மந்திரிசபை எப்பொழுதும் சர்வமந்திரிசபையாகவேயிருக்குமென்பதையும் சிங்கள மந்திரிமார் இட்டதேசட்டமாகுமென்பதையுந் தொகையிற்குறைந்தசாதியாரின் பிரதிநிதிகள் எடுத்துக்காட்டினர்கள்; வாதாடினர்கள்; இரந்தார்கள்; கண்டித்துப் பேசினர்கள். ஐம்பது அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு அரசாங்கசபையில் ஐந்தில் மூன்றுவிகிதமான சிங்களருக்கு 30 பிரதிநிதிகளுக்குத்தானே இடமுண்டு; அப்படியிருப்ப இப்பொழுது 39 சிங்களப் பிரதிநிதிகளிருப்பதற்கு நியாயமில்லை என்று தொகையிற் குறைந்த சாதியினர் பொருட்டு 20 பேருக்கு இடமிருப்ப 11பேர்தானே இருக்கிறார்கள் இது சரியல்லவே என்றும் எடுத்துக்காட்டினர்கள்; அதற்கு ஸேர். பரன் சொன்ன பொருந்தா நியாயமென்ன? சபைத் தலைவராயிருப்பவர் ஒரு தமிழ்ப் பிரதிநிதிதானே; அது போதாதா? என்கிறார்; சரி தமிழர் விஷயத்திலேதான் இந்த நியாயத்தைச் சொல்லிவிட்டார்' மற்றை இஸ்லாமியர் பறங்கியர், இந்தியர், அயிரோப்பியர் தங்கள் பிரதிநிதிகளில் ஒருவராயினும் சபைத் தலைவராக, இல்லையேல் மந்திரியாக இல்லையென்று கேட்டால் என்ன விடை சொல்லுவார்?

ஸேர். பரன் இவ்வளவில் நின்றுவிடவில்லை; சிங்கள நாடுகளிலே தமிழர்கள் இல்லாமலானவர்கள் கிராமச்சங்க அக்கிராசனராக இருக்கிறார்களாம்; யாழ்ப்பாணத்திலே ஒரு சிங்கள மனுஷன் கிராமச்சங்க அக்கிராசனராக விருப்பதைத் தமிழர்கள் காட்டுவார்களா? என்று ஆட்சேபிக்கிறார். யாழ்ப்பாணத்திலே சிங்களர் மிக ஐதாயிருக்கிறார்க ளென்பதை இச் சிங்களத்தலைவர் அறிந்திலர் போலும். மேலும் யாழ்ப்பாணத்திலே எந்தச் சிங்கள மனுஷன் இற்றைவரையில் கிராமச்சங்க அங்கத்தவராய் இல்லையேல் தலைவராய் வர முற்பட்டு நின்றதென்பதை இவர் எடுத்துக்காட்டுவாரா? சிங்கள நாடுகளில் விசேஷமாகப் பட்டினங்களில் போதிய தொகையான தமிழர்கள் நல்ல நிலைமையிலிருந்து கருமம் ஆற்றி வருகின்றார்கள். அதனால் அவர்கள் ஆங்காங்கு தகைமைபற்றிக் கிராமச்சங்கத் தலைவர்களாகவும் அங்கத்தவர்களாகவும் பட்டின பரிபாலன சங்கம் நகரசங்கங்களின் அங்கத்தவர்கள் தலைவர்களாகவுந் தேர்தல் செய்யப்படுகிறார்கள்.

இனி, யாழ்ப்பாணத்திலே யாழ்ப்பாணத்தவர் சிங்களமக்களை வைத்து நடத்தும் கண்ணியம்போலச் சிங்கள நாட்டில் யாழ்ப்பாணத்தவரை எவரும் வைத்துநடத்தமாட்டார்களே. சிங்கள பௌத்தர்கள் தங்களுக்கு ஆலயம் கட்டி வழிபடுதற்காகட்டும், பௌத்தகுருவாக வருதற்காய மாணாக்கர்கள் இந்துக்கல்லூரியில் வேதனையின்றித் தமிழ் ஆங்கில கல்வியைப் பயின்றுகொள்வதற்காகட்டும் அவர்கள் தங்கள் பாஷைக் கலாசாலைகளை வைத்துநடத்துவதற்காகட்டும் பூரண உதவியாகவுள்ளவர்கள் இந்த யாழ்ப்பாணத்திலுள்ள உதாரத்துவத்தோடுகூடிய தமிழ்மக்களல்லவா? இஸ்லாமிய பிரதிநிதியாகிய மிஸ்டர் ஐயா சொன்னபிரகாரம் அதிகாரவெறி கொண்டு நின்றபோது ஸேர். பரனுக்கு இந்நன்மைகள் புலப்படுமா? அவர் உள்ளத்தில் நன்றி பாராட்டுங் குணம் ஏற்படுமா? இரண்டுமில்லையாம். மேலும் மிஸ்டர் பண்டாரநாயக என்னும் ஒரு சிங்களப் பிரதிநிதி சென்றவாரம் நேர்ந்த விவாதத்திலே, "சமமான பிரதிநிதித்துவம் இல்லாமையினாலே சிங்களர் அநியாயஞ் செய்தார்கள் என்பதை ஒரு சந்தர்ப்பத்திலாயினும் எடுத்துக்காட்ட முடியுமா" என்று ஒரு கேள்வி கேட்கிறார். இதே விவாதம் நடந்தபோது மிஸ்டர். T. B. ஜயா ஒரு திருத்தப்பிரேரணையும் மிஸ்டர் I. X. பெரேரு பிறிதொரு திருத்தப்பிரேரணையும், திரு. நடேசன் வேறொரு திருத்தப் பிரேரணையுஞ் செய்தார்களே; இந்த மூன்று பிரேரணைகளையுஞ் சிங்களப் பிரதிநிதிகளெல்லாரும் ஒவ்வொரு முறையும் ஒருங்கு சேர்ந்து நிறைவேறுமாறு செய்துவிட்டார்களே; இதனைவிடச் சிங்களர் செய்யும் அக்கிரமத்திற்கு இன்னமும் அத்தாட்சி எடுத்துக்காட்ட வேண்டுமா?

மேலும் "முதுகாட்டிற் காக்கை யுவக்கும்" பிணம் என்றவிதமாக, சாதிக்கு மூடி வாய்த்த சாது ஒரு தேசாதிபதியும் இச் சிங்களத் தலைவருக்கு வசதியாக அகப்பட்டுக் கொண்டார்; அவர் ஏதோ பத்துப் பிரதிநியோக பிரதிநிதித்துவந்தான் உதவுவதாக வாக்களித்துள்ளாராம். அந்தப் பத்தில் இரண்டு கண்டிச் சிங்களவருக்காம்; போனால் எஞ்சிய எட்டையும் தமிழர் இஸ்லாமியர் இலங்கையிந்தியர் தங்களுக்கிடையே மனமொத்துப் பிரித்துக் கொள்ளட்டுமாம். இப்படியானால் இளநீர் உண்டவன் உண்ணக் கோம்பை யெடுத்தவன் குறை கேட்டவாறாகத்தான் காரியம் முடியும். இனி, இத் தேசாதிபதியும் பிரித்தாளும் நோக்கமுடையவராய்ச் சிங்களவர்க்கு ஏதோ இரகசியமாகச் சொல்லியிருக்கிறார் என்று ஒரு பிரதிநிதி சபையிலே எடுத்துச் சொல்ல இன்னொரு பிரதிநிதி அது வீண்கதை யென்றார். எவர் சொன்னது மெய் எவர் சொன்னது வீண்கதை யென்றது உற்று நோக்குவார்க்கே புலப்படும்; நெருப்பின்றிப் புகையாதென்பது பழமொழி; "இந்தத் திருத்தப் பிரேரணை எங்களவிராது. ஒரு 'றோயல் கமிஷன்' விசாரணைச் சங்கம் வைத்தே தீர்க்க வேண்டுமென்று திரு. மகாதேவா சொன்னபோது, ஸேர். பரன், மகாதேவா இப்படியுஞ் சொல்லுகிறாரே, வகுப்புவாதம் எவ்வளவிலே தடித்துவிட்டது, பாருங்கள்" என்று தமிழ்ப் பிரதிநிதிமேல் வகுப்புவாதக் குற்றஞ் சாட்டுகிறார். அவர் அப்படிச் சாட்டுவது அரிதட்டு ஊசியைப் பார்த்து உனக்கொரு ஓட்டை இருக்கிறதென்று சொல்லுவது போல அசம்பாவிதமல்லவா?

## பண்டித ஜவஹர் விஜயம்

### குதூகல வரவேற்பு அளிக்க சகல வகுப்புப் பிரதிநிதிகளுஞ்சேர்ந்த உபசாரக் கமிட்டி நியமனம்

ஜூன் 8

பண்டித ஜவஹருக்கு வரவேற்பு அளிக்கவேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்யும் பொருட்டு நேற்று உள்நாட்டு மந்திரி ஸேர். பாரன் ஜயதிலகாவின் பங்களாவில் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. அப்பொழுது இலங்கையிலுள்ள சகல வகுப்புப் பிரதிநிதிகளும் அடங்கிய வரவேற்பு உபசாரக் கொமிற்றி ஒன்று அமைக்கப்பட்டதுடன் அவர் இலங்கையர்களின் விருந்தினராக விருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பண்டிதநேரு அடுத்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு ரத்மலானை விமான நிலையத்தில் வந்து இறங்குகையில் வரவேற்கப்படுவார். மேற்குறித்த கூட்டுக்கொமிற்றியார் குதூகலமான வரவேற்பு அளிக்கப்படும்.

ஸேர். பரன் சுகவீனத்தைமுன்னிட்டு விவசாய மந்திரி திரு. டி. எஸ் சேனநாயகா நேற்று நடந்த கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

பாரதத்தாயின் சிரேஷ்ட அருந்தவப் புதல்வராம் பண்டிதநேருவிற்குக் குதூகல வரவேற்பு அளிக்கப்படவேண்டுமென இக்கூட்டத்தில் திரு சேனநாயகா குறிப்பிட்டார்.

நூற்றுக்கும் அதிகமான அங்கத்தவர்கள் கொண்ட வரவேற்புக் கொமிற்றி ஒன்று அமைக்கப்பட்டது.

இக்கொமிற்றியின் உத்தியோகஸ்தர்களின் விபரம் வருமாறு:—

தலைவர் ஸேர். வில்பிரட் டி. சொய்சா காரியதரிசிகள் திரு. ஏ. எல். வீட் திரு. எஸ். சோமசுந்தரம் திரு. ஏ. டபிள்யு. எச். அபயசுந்தர பொக்கிஷதாரர்கள். திரு. ஏ. ஜீ. ஆகமலி, திரு. எச். டபிள்யு. அமரசூரியா.

பண்டிதநேரு இலங்கையில் தங்கியிருக்குங்காலத்து அவருடைய இஷ்டம்போல் அவர் தமது வேலைத்திட்டத்தை அமைத்துக் கொள்வார்.

முதல் நாள் பண்டித நேரு சிலஇந்தியத் தலைவர்களைச் சந்தித்துச் சம்பாஷிப்பாரென்றும், மறுதினம் மந்திரிகளைச் சந்தித்துப் பேசுவாரென்றும் அவர் கொழும்பில் 5 தினங்களும், பீடபூமிப்பிரதேசத்தில் 2 தினங்களும் தங்கியிருப்பாரென்றும் திரு. ஆர். எஸ். டீ குறித்த கூட்டத்திற்றெரிவித்தார்.

## காவெட்டிக் கொலை எத்தன வழக்கு

### எதிரிக்கு எட்டுவருஷக் கடூழிய மறியல் தண்டனை

### பொய்ச்சாக்ஷியங் கூறிய இருவருக்கு அபராதம்

7-7-39

காவெட்டி வடக்கில் வசிக்கும் கந்தையா நடேசுவென்பவர் சென்ற 1938ம் ஆண்டு ஜூலைமாசம் 9ந் தேதி அவ்வூர்ப் பரமு இராமலிங்கமென்பவருடைய இடதுகைத்தோள் மூட்டில் ஒரு வில்லுக்கத்தியாற்குத்தினதினிமித்தமாய்க் கொலை செய்ய எத்தனித்தாகக் குற்றஞ் சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டில் விசாரணைக்கெடுக்கப்பட்டது.

யூரித்தலைவராகத் திரு N. சபாபதி தெரிவுசெய்யப்பட்டார்.

எதிரிகட்சாகத் திரு. S. D. தம்புவும் திரு. சம்பந்தரும் திரு V. S கார்த்திகேசுவின் உதவியைக்கொண்டு வாதித்தனர். திரு. S. D. தம்பு வழக்கைத் திரு. சம்பந்தரே நடத்துவதாகக்கூறிச் சென்றுவிட்டார்.

காயக்காரனாகிய பரமு இராமலிங்கம் கூறியவற்றின் சாராம்சமாவது:-

நான் அல்வாய்தெற்கு விதானையாரின் இளைய சகோதரன். நான் இச் சம்பவத்தன்று எனது மூத்த சகோதரனாகிய விதானையார் வீட்டிலின்று என்னுடைய காவெட்டிவடக்கிலிருக்கும் வீட்டிற்கு ஓர் வண்டிலில S. கணபதிப்பிள்ளை என்பவரோடு வந்தேன். வழியிலுள்ள மண்டலமென்பவருடையவீட்டடியில் இரவு 8மணியளவில் வந்தபோது றோட்டுக்கானில் அம்பட்டக் கந்தன்-முத்தனும், முருகேசு-கிட்ணனும் படுத்தாகொண்டு நடேசு அடித்துப்போட்டு எங்களை அவ்விடத்தைவிட்டு எழும்பக்கூடாதென்று சொல்லிவிட்டுப் போய்விட்டதாகச் சத்தம் போட்டனர். நான் எனது வண்டிலை ஒரு கானில் மறித்து அவ்விடஞ் சென்று பார்த்தேன். அவர்களை அவ்விடத்திற் கண்டதும் "ஏன் கத்துகிறீர்கள் என்று கேட்டேன்" அப்போது முத்தன் "நடேசு தனக்கு க்ஷவரஞ் செய்ய வரும்படி என்னிடம் சொன்னர். நான் நேரமில்லாமையாற் போகாதுவிட்டேன்; போகாதுவிட்டதற்காக என்னை அவர் சந்தித்து அடித்துவிட்டார்' என்று கூறினன்' அல்லாமலும் தங்களை ஒரு வண்டிலில் விதானையார் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போகும்படியும் என்னைக்கேட்டான். இவர்களை நான் விதானையார் வீட்டிற்குக் கொண்டு போக எத்தனித்தபோது, நடேசு எங்கேயோ நின்று அவ்விடம் வந்து "அம்பட்டப் பிள்ளைகள் வண்டிலிலுமா போகப்போகிறீர்களோ" என்று சொல்லிவிட்டு என்னைப் பார்த்து, "நீர் அவர்களை வண்டிலில் ஏற்றிக்கொண்டு போகப் போகிறீரோ" வென்று சொன்னர். அதற்கு நான் "அவர்களைக் கூட்டிக்கொண்டு போவேன், போகாமல்விடுவேன்" அதற்கு உனக்கென்னவென்று கட்டளைக்குச் சொன்னேன். உடனே அவர் எனக்கு ஒரு சவுக்கால் முதுகில் அடித்தார். நான் சவுக்கைப் பிடித்துக்கொண்டு "சவுக்கை விடு" என்று சொன்னேன். அவன் விடவில்லை. நான் அவனுடைய கன்னத்தில் ஒரு அடி அடித்தேன். அவன் சவுக்கை விட்டுவிட்டுப் பின்னுக்குச்சென்றான். நானும்வண்டிலைநோக்கிச்சென்றேன். எதிரி என்னிடம் ஓடிவந்து "அண்ணை சவுக்கைத் தந்துவிட்டுப்போ" வென்று கேட்டார். "நான் இப்போது தந்தால் நீ எனக்கு அடிப்பாய். ஆகையால், நாளைக்குக் காலமை எனது வீட்டிற்கு வா தருகிறேன்" என்று சொன்னேன். அவன் திரும்பவும் சவுக்கைத் தரும்படி கேட்டான். நான் மறுத்தேன். அப்போது அவன் எனது இடதுதோள்மூட்டிற் கத்தியாற்குத்தினன். நான்சத்தமிட்டேன். எதிரி அவ்விடத்தைவிட்டுக் கத்தியையும் கொண்டு ஓடிவிட்டான். நான் அடுத்தவீட்டுக்காரனாகிய மண்டலத்தைக் கூப்பிட்டுக்கொண்டு அவருடைய வீட்டை நோக்கிச் சென்றேன். அப்போது அறிவு மயங்கி நிலத்தில் விழுந்துவிட்டேன். ஆஸ்பத்திரியில் தான் எனக்கு அறிவு தெளிவடைந்தது.

வேறு சாக்ஷிகளையும் விசாரணை செய்தபின்னர் யூரிமார் ஏகமனதாக எதிரியைக் குற்றவாளியெனக்காண்பதாகக் கூறினர். நீதியாசர் எதிரியைப் பார்த்துக் கூறியவற்றின் சாராம்சமாவது:-

என்னுடைய எண்ணம் எப்படி இருந்ததோ அப்படியே யூரிமார்களும் உன்னுடைய வழக்கிற்குத் தீர்ப்புக் கொண்டு வந்தனர். வேறுவழியில் தீர்ப்புக் கொண்டுவரமுடியாதவர்களாகையால் உன்னைக் குற்றவாளியாகக் காண்பதாகிய தீர்ப்பைக் கொண்டுவர அவர்கட்கு நேர்ந்தது. அத்தீர்ப்பை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். இருந்தாலும் உன்னுடைய நன்னடத்தையையும் இளம் வயதையும் உத்தேசித்தே தீர்ப்புக் கூற இருக்கிறேன். ஆனாலும் நீ செய்த குற்றச்சாட்டிலும் பார்க்க மிகவும் பாரதூரமான குற்றம் உன்மீது என்னவென்றால் உனது பக்கத்திற்காக அடுக்குப் பண்ணின பொய்யான கதையேயாம். யாழ்ப்பாணத்திலுள்ள பத்தில் ஒன்பது பங்கு நல்லவர்களுடைய பேரும் உன்னைப்போன்ற பத்தில் ஒரு பங்கு மனிதரால் கெட்டுவிடுகிறது. ஆகையால் மற்றவர்கள் இனிமேல் திருந்தி நடக்கும்படி செய்வதற்கு உனக்குக் கடுமையான தண்டனை விதிக்கவேண்டியிருப்பதால், உனக்கு எட்டுவருஷக் கடூழிய மறியல் தண்டனை விதிக்கிறேனெனக் கூறி, இவ்வழக்கில் எதிரி பக்கத்திற்குச் சாக்ஷியம் கூறவந்த ஆழ்வார் - பொன்னையாவும் முருகேசு - நடராசாவும் சாக்ஷிகள் தங்குமிடத்திலிருந்து நீதியாசர் முன்னிலைக்கு அழைக்கப்பட்டனர். ஆழ்வார்-பொன்னையாவை நீ பொய்ச்சாக்ஷியம் கூறினப் என்று ஏன் உன்மீது குற்றஞ்சாட்டப்படாது என்று ஏதாவது நியாயங்காட்ட உனக்கிருக்கிறதா வெனக் கேட்டபோது சாக்ஷி தான் பொய்சொல்லவில்லை யென்று கூறினன். நீதியாசர் நீ இங்கே சாக்ஷியம் கூற வந்தபோது இங்கேயுள்ள நீதியாசரையும் யூரிக்கனவான்களையும் ஒரு கூட்டம் மடையரென நினைத்து வந்து சாக்ஷியம் கூறியிருக்கிறாய். உன்போன்ற கெட்ட கட்டாமுட்டிகளாற்றான் (vagabonds) யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல மற்றைய எந்தத் தேசத்திலும் கிறிமினற் குற்றச்சாட்டுகள் அதிகரிக்கின்றன. நான் என்னளவில் இவைகளுக்கு இடங்கொடுக்கக்கூடியவனல்லவெனக் கூறி உனக்கு 75 ரூபா அபராதம் இறுக்கும்படி தீர்க்கிறேன் என்றார். பணம் இறுக்கத் தவறினல், இரண்டுமாதக் கடூழிய மறியல் தண்டனை அனுபவிக்கவேண்டுமென்றும் கூறினர்.

இரண்டாவதாக, முருகேசு-நடராசா மீதும் மேற்கூறிய குற்றச்சாட்டிற்கு ஏதாவது நியாயம் சொல்லவிருக்கிறதா வென்று கேட்டபோது அவன் தான் பயத்தில் தடுமாறிக் கூறிவிட்டதாகச் சொன்னன். நீதியாசர் அது நியாயமில்லை எனச் சொல்லி நீ கோட்டை ஒரு பஸ்காலை என மதித்தாய் போலும் என்று சொல்லி 75 ரூபா அபராதம் விதித்தார். பணம் இறுக்கத் தவறினல் இரண்டு மாதக் கடூழிய மறியல்தண்டனை அனுபவிக்கவேண்டுமென்றும் கூறினர்.

க. சி.

# கொக்குவிற் கொலை வழக்கு

## வயிற்றிற் குத்திக் கொலை செய்தாராம்

## நீதிபதி எதிரிக்கு வாறண்ட் விடுத்தார்

7-7-39

இன்று இன்ஸ்பெக்டர் J. W. L. அற்றிக்கலை கொக்குவிலைச் சேர்ந்த கந்தையா-செல்லத்துரை அவ்வூர்ச் சின்னப்பு செல்லத்துரைக்குக் கத்தியால் வயிற்றிற் குத்தினதினிமித்தமாகப் படுகொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டி யாழ்ப்பாணம் கோட்டில் ஒரு வழக்குத் தொடர்ந்தார். இவ்வழக்கில் கொக்குவிலில் வசிப்பவரும் வியாபாரியுமாகிய சரவணமுத்து நடராசா கூறிய சாட்சியத்தின் சாராம்சமாவது:—

சென்ற வியாழக்கிழமை பிற்பகல் மூன்றுமணியளவில் நானும் அப்பாப்பிள்ளை - ஐயாத்துரையும் எதிரியாகிய கந்தையா செல்லத்துரையும் இறந்தவனாகிய சின்னப்பு செல்லத்துரையுமாகக் கொக்குவிலிற் கள்ளச் சாராயம் விற்கும் நாகம்மா என்பவளுடைய வீட்டிற்குச் சென்று அங்கே ஐயாத்துரை அரைப்போத்தல் சாராயம்வாங்கினார். இதனை நாங்கள் எல்லோருமாகப் பங்கிட்டுக் குடித்தோம். குடித்து முடிந்ததும் கந்தையா செல்லத்துரை இறந்தவனாகிய சின்னப்பு செல்லத்துரைக்கு ஒரு சிகரற்றைக் கொடுத்தான். அதை அவன் வாங்க மறுத்தான். அப்போது எதிரியாகிய கந்தையா செல்லத்துரையைத் தான் கொடுக்கும் சிகரற்றை வாங்கிக் குடிக்கச்சொன்னான்; இவர்கள் இருவருக்குமிடையே இதிலிருந்து கதைவழி உண்டாயிற்று நான் அவர்களை நாகம்மாவளவுக்கு வெளியே போவோமென்று சொன்னேன். உடனே எதிரி அவ்விடத்தைவிட்டு வெளியே சென்றான். அவன் வெளியே சென்று றெயில்பாதைக்குப் பக்கத்தே செல்லும் அடிப்பாதை வழியாகச் சென்றான நானும் ஐயாத்துரையும் இறந்தவனாக எதிரியைப் பின்தொடர்ந்து சென்றோம். இறந்தவன் எதிரிக்குக் கிட்டப் போய் "என்ன மச்சான் என்னோடே உனக்குக் கோபமா"? என்று சொன்னான். இப்படி இவர்கள் இருவரும் கதைத்துக்கொண்டு திரும்போது இவர்கள் இருவரையும் விலத்திக்கொண்டு நானும் ஐயாத்துரையுமாகக் கொக்குவில் ஸ்டேஷனை நோக்கிச் சென்றோம். அவர்களும் தாங்கள் வந்த வழியாலே எங்களைப் பின்தொடர்ந்தனர். அவ்விடத்திலிருந்து 50 யார் தூரத்திலுள்ள றெயில்பாதையைக் கடந்து செல்லும் றோட்டுக்கு அருகாமையில், நானும் ஐயாத்துரையும் போனபோது ஐயோ என்றொரு சத்தம் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன். எதிரியாகிய கந்தையா செல்லத்துரை இறந்தவனாகிய சின்னப்பு செல்லத்துரைக்கு 5 அங்குல நீளமுள்ள ஓர் கத்தியால் மார்பிற் குத்திவிட்டுக் கத்தியையுங் கொண்டு றெயில்வே ஸ்டேஷன் பக்கம் ஓடுவதைக் கண்டேன். இறந்தவன் காயத்தைக் கையாற் பொத்திப் பிடித்துக்கொண்டு றெயில்பாதையைக் கடந்து செல்லும் குறுக்குறோட்டுப் பக்கமாகச் சிறிது தூரம் நடந்து சென்றான். நான் அவனுக்கு அருகாமையிற்போய் அவனை அதிலிருக்கும்படி கூறிவிட்டு உடையார் வீட்டுக்குச் சென்றேன். இவற்றையெல்லாம் ஐயாத்துரை சிறிது தூரத்தில் நின்று அவதானித்துக்கொண்டு நின்றார். நான் உடையார் வீட்டுக்குச் சென்று நான் கண்டவற்றை உடையாருக்குக் கூறினேன். நான் கூறியவற்றை உடையார் தனது புத்தகத்தில் எழுதிய பின்னர், நானும் உடையாருமாகச் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றோம். உடையார் அங்கே அவனுடைய வாய் முறைப்பாட்டைக் கேட்டு எழுதினார். நான் கார்பிடிக்கச் சென்றேன். நான் கார் பிடித்துக்கொண்டு வருவதற்கு முன், காயக்காரனை வேறொருகாரில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விட்டதையறிந்து நானோர் சயிக்கிளை எடுத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். ஆஸ்பத்திரியிற் பொலிஸ் இன்ஸ்பெக்டர் என்னுடைய வாய்முறைப் பாட்டைக்கேட்டு எழுதினார். எதிரியும் இறந்தவனும் அன்று ஓர் அளவிற்குக் குடித்து இருந்தார்களேயல்லாமல், நன்றாகக் குடித்திருக்கவில்லை. நானும் ஐயாத்துரையும் குடிக்கவில்லை. எதிரியும் இறந்தவனும் சிநேகிதர்கள். ஆனால், அவர்கள் இடையிடையே ஒருவருக்கொருவர் சண்டைபிடிப்பதுமுண்டு. அன்று நாங்கள் நாகம்மா வீட்டை விட்டு வெளிக்கிட்டபோது எல்லோரும் சமாதானமாக வெளிக்கிட்டோம்.

கொக்குவில் உடையார் சிவசிதம்பரப்பிள்ளை கூறியவற்றின் சாராம்சமாவது:-

சென்ற 6-3 39ந் தேதி மூன்றரை மணியளவில் சரவணமுத்து நடராசா வந்து கந்தையா செல்லத்துரை என்பவர் சின்னப்பு செல்லத்துரைக்குக் கத்தியாற் குத்திவிட்டதாகச் சொன்னான். நான் அவருடைய வாய் முறைப்பாட்டைப் பதிவுசெய்தபின்னர், அவ்விடத்திற்குச் சென்றேன் அங்கே இறந்தவனுக்குப் பக்கத்திலே அவனுடைய மூத்த சகோதரன் இராசா நின்றான். இறந்தவன் அந்நேரத்தில் வாய்பேசக்கூடிய நிலைமையிலிருந்தான். யார் குத்தியதென்று நானவனிடத்திற் கேட்டபோது அவன் 'கொட்டன் செல்லத்துரை" (கந்தையா செல்லத்துரை) என்று சொன்னான். சாட்சிகள் யாராவது நிற்கிறார்களோ என்று கேட்டபோது நடராசாவும் இயபன் ஐயாத்துரையும் (அப்பாப்பிள்ளை ஐயாத்துரை) நின்றதாகச் சொன்னான். நான் போனபோது அவனுடைய காயத்தை யாரோ சீலையாற் கட்டியிருந்தார்கள். அவனுடைய வாய்முறைப்பாட்டைக் கேட்டு எழுதியபின்னர், நான் இவனைக் காரிலேற்றி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றேன். காரிலிருந்து ஆஸ்பத்திரியறைக்கு ஆளைத் தூக்கிச் சென்றபோதுதான அவன் இறந்தான். நானும் பொலிசாரும் சாட்சியாகிய அப்பாப்பிள்ளை ஐயாத்துரையையும் எதிரியாகிய கந்தையா செல்லத்துரையையும் தேடினேம்; காணவில்லை.

இறந்தவனின் சகோதரனின் சின்னப்பு இராசா கூறியவற்றின் சாராம்சமாவது:-

நான் இச்சம்பவத்தைக் கேட்டு அவ்விடத்திற்குச் சென்றபோது புற்பத்தைப் பிள்ளையார் கோவிலுக்குப் பிற்புறத்தேயுள்ள ஒரு பனையடியில் எனது சகோதரன் சின்னப்பு செல்லத்துரை வயிற்றில் ஒரு குத்துக் காயத்தோடு விழுந்து கிடக்கக் கண்டேன். யார் குத்தியதென நான் கேட்டபோது கொட்டன் செல்லத்துரை குத்தியதாயும் நடராசாவும் ஐயாத்துரையும் கண்டதாயும் கூறினார்.

நடராசா உடையாரை அவ்விடத்திற்குக் கூட்டிவந்தார். உடையாருக்கு எனது சகோதரன் எனக்குக் கூறியவற்றையெல்லாம் கூறினார். உடையார் ஆஸ்பத்திரிக்கு அவரை ஏற்றிச் சென்றார். அங்கே அவர் இறந்தார்.

மலையாளப் புகையிலை முக்கந்தர் அப்பாப்பிள்ளை ஐயாத்துரை கூறியவற்றின் சாராம்சமாவது:—6-7-39ந்தேதி 3½ மணியளவில் நான் கொக்குவில் இறையில் பாதையடியில் நடராசாவையும் எதிரியையும் இறந்தவனையும் சந்தித்தேன். நான் அவர்களைச் சந்தித்ததும் நடராசாவைக் கூப்பிட்டேன், அவர் என்னோடுவந்தார். நாங்கள் இருவரும் கொக்குவில் ஸ்டேசன் பக்கமாகச்சென்று நடராசாவை ஓர் ஒழுங்கையடியில் நிறுத்தி நான் அவ்வொழுங்கையால் சென்று விட்டேன். நான் அன்று மறைந்து திரியவில்லை என்னிடம் வந்த ஒரு கடன் காரனைக் கூட்டிச் சென்று அனுப்பிவிட்டுப் பின்னர்க் கோவிலுக்குச் சென்று வீடு திரும்பி வந்தேன். நாகம்மா வீட்டுக்கு நான் அதிகம் போவதில்லை.

டாக்குத்தர் திரு. C. குருசாகுவும் சின்னத்தம்பி முருகேசுவும் சாட்சியங் கூறிய பின்னர், நீதிபதி எதிரிக்கு வாறண்ட் விடுத்து வழக்கை வருகிற 12ந் தேதிக்குத் தவணையிட்டார்.

---

### சுன்டிக்குளிக் கொலை எத்தன வழக்கு

**எதிரிக்கு ஆறுமாதச் சாதாரண மறியலும் 250 ரூபா அபராதமும்**

சுண்டிக்குழியில் வசிக்கும் பொன்னம்பலம் - சின்னத்துரை அல்லது மாஸ்டர் என்பவர் சென்ற 1938ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ந் திகதி கரையூரில வசிக்கும் இராசையா பொன்னையா என்பவருக்கு வெட்டுமாயுதத்தாலும் பொல்லாலும் காயமுண்டாக்கியதனிமித்தமாகக் கொலை செய்ய எத்தனித்தாரெனக் குற்றஞ் சாட்டிய வழக்குச் சுப்ரீம் கோட்டில் எடுக்கப்பட்டது. விசாரணை நடக்கையில் சாட்டப்பட்ட குற்றத்திலும் குறைந்த குற்றச்சாட்டாகிய கையினுபாடாய்க் கொலைசெய்ய எத்தனித்ததென்ற குற்றச்சாட்டிற்குத் தான் குற்றவாளியென எதிரி கூறினமையினால், நீதியரசர் எதிரிக்கு ஆறுமாதச் சாதாரண மறியலும் 250 ரூபா அபராதப் பணமும் கட்டும்படி கூறினார். எதிரி அபராதப் பணம் இறுத்தால் அதில் ஒரு பகுதி காயக்காரனுக்குச் சேரவேண்டியதென்றுங் கூறினார். மேற்கூறிய அபராதப் பணத்தை இறுக்கத் தவறினால், ஒன்பது மாதக் கடூழிய மறியல் தண்டனை அநுபவிக்கப்பட வேண்டும் என்றுங் கூறினார். [ச.கி.]

---

### முசோலினி கோஷ்டியின் மூர்க்கத் தனமான ஆட்சி

அலகபாத், ஜூலை 4—

அகில இந்திய காங்கிரஸ் நிருவாகசபைக்காரியாலயத்திற்குப் பின்கண்ட தகவல் கிடைத்திருக்கிறது:—அபிஸீனியா, இத்தாலிய சோமாலிலாண்டு, எரிட்ரியா ஆகிய இத்தாலியின் ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் 1300 இந்தியர் வசிக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் படித்தவர்கள். நல்ல கலாஞானமும் நாகரீகமும் வாய்ந்தவர்கள். இந் நாடுகளில் இந்தியர்கள் தங்களை வித்தியாசப்படுத்தி அவமானப்படுத்தும் சட்டதிட்டங்களுக்குட்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் ஹோட்டல்களுக்குள்ளும் சிற்றுண்டிச் சாலைகளுக்குள்ளும் சினிமாக்களுக்குள்ளும்நுழையக்கூடாதெனத் தடுக்கப்பட்டிருக்கின்றனர். ஐரோப்பியாகளால் ஓட்டப்படும் மோட்டார்களையும்போதுபஸ்களையும் உபயோகிக்கக் கூடாதென்றும், முதல்,இரண்டாவது வகுப்புகளில் பிரயாணஞ் செய்யக் கூடாதென்றும், பெரிய தபால்—தந்தி ஆபீஸ்களில் நுழையக்கூடா தென்றும் இந்தியர் தடுக்கப்பட்டிருக்கின்றனர். ஆஸ்பத்திரிகளுக்குள்ளிருந்து இந்தியர் சிகிச்சை பெறக்கூடாதென்றும் நகரின் மத்திய பாகங்களிலிருந்து வியாபாரஞ் செய்யக் கூடாதென்றும் தடுக்கப்பட்டிருக்கின்றனர். இந்தச் சகிக்கமுடியாத நிலையை முடிவுக்குக் கொண்டுவர 2 வருஷங்களுக்கு மேலாகச்செய்த முயற்சி பலிக்கவில்லை இந்தியர்கள் தங்களது குறைகளைப் பரிகரித்துக் கொள்ளச் செய்து வந்த முயற்சிகளில் இதுவரை வெற்றி பெறவில்லை.—அ-பி.

---

### அளவெட்டி வித்தியாசங்க நிருவாகசபையின் வருடாந்தக் கூட்டம்

இக்கூட்டம் 1-7-39திகதி சனிக்கிழமை மாலை 8 மணியளவில் "சதாசிவ தவிபாலதா பாடசாலை மண்டபத்தில்" உயர் திரு. க. இராசரத்தினமவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. மேற்படி சங்கத்துக்கு இத்தவருடம், அக்கிராசனராகத் திரு. க. இராசரத்தினம் அவர்களையும் உப அக்கிராசனராகத் திரு. க. வைத்தியலிங்கம் (உடையார்) அவர்களையும், காரியதரிசியாக, திரு. ஐ. ஆறுமுகம் அவர்களையும், தனாதிகாரியாக, திரு. கா. செல்லையா அவர்களையும், பாடசாலை மனேச்சராகத் திரு. வே. செல்லப்பா அவர்களையும், உபசபையின் கௌரவ அங்கத்தவர்களாகத் திருவாளர்கள், ஐ. சுப்பிரமணியம், கா. பசுபதிப்பிள்ளை, வே. சண்முகம், ஆகியவர்களையும், கணக்குப்பரிசோதகர்களாகத் திரு. V. K. சுப்பிரமணியம் (பிறக்டர்) அவர்களையும் திரு. வே. க. வேலாயுதம் அவர்களையும் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகக் காரியதரிசி அறிவிக்கின்றார்.

---

# யாழ்ப்பாணப் புகையிலைத் தொழிலுக்கு ஆபத்து

## தினச் சம்பளத் திருவாங்கூர் வாசிகளை நாடுகடத்தும் வழக்கத்தைப் பின்போட்டுவைக்க அவசரப் பிரேரணை

சென்ற வெள்ளிக்கிழமை யன்று அரசாங்க சபையில் திரு. S. நடேசன் அவர்கள் பின்வரும் பிரேரணையை முன்னறிக்கை செய்தார்.

திருவாங்கூர் அரசாங்கம் யாழ்ப்பாணப் புகையிலையின் மீது கண்டி ஒன்றுக்குத் துறைமுக வரியை ரூபா 135 லிருந்து 200க்கு உயர்த்திவிட்டார்கள். இதனால், திருவாங்கூருடன் யாழ்ப்பாணம் செய்துவந்த புகையிலை வர்த்தகம் அழிந்துபோகுமென்ற அச்சம் ஏற்படுகிறது. அதனால் யாழ்ப்பாணத் தீபகற்பத்தைச் சேர்ந்த பெரும்பான்மை மக்கள் வேலையில்லாது திண்டாடித் தரித்திர நிலைமையை அடையக்கூடும். எனவே, திருவாங்கூர் அரசாங்கத்துடன் உடனே சமரசப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்குத் திருவாங்கூர்த் தொழிலாளர்களை நாடுகடத்தும் திட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைக்க வேண்டுமென்று இந்தச்சபை அபிப்பிராயப்படுகிறது.

இந்தப் பிரேரணையை அடுத்த செவ்வாய்க்கிழமை ஓர் அவசரப் பிரேரணையாகக் கொண்டுவரப்போவதாகத் திரு. நடேசன் தெரிவித்தார்.

### திருவிதாங்கூர் அதிகாரிகள் யாழ்ப்பாணப் புகையிலைத் தீர்வையை உயர்த்திய நோக்கம்

திருவிதாங்கூர் அதிகாரிகள் அந்நாட்டிற் கனுப்பப்படும் யாழ்ப்பாணப் புகையிலையின் தீர்வையை 200 ரூபாவாக உயர்த்தியதற்குக் காரணம் இலங்கையருக்கும் இந்தியருக்கும் ஏற்பட்ட எதிரிடை காரணமாகவல்ல, வருவாயை உத்தேசித்தேயாமென்று சில சிங்களர் சமாதானஞ் செல்லுகின்றார்கள். வருவாயை உத்தேசித்து அவர்கள் தீர்வையை உயர்த்துபவர்களாக விருந்தால் கோயம்புத்தூரிலிருந்து திருவிதாங்கூருக்கு அனுப்பப்படும் புகையிலையின் வரியையும் உயர்த்தி யிருப்பார்கள்; அது பழையபடி கண்டியொன்றுக்குத் தீர்வை 110 ரூபாவாகவே (இப்பொழுதும்) இருக்கின்றது.

---

### இனியாவது சைவப் பெற்றோருக்கு புத்திவருமா?

**தாயிலிருந்து மகளைப் பிரித்த மட அதிகாரிகள்**

கட்டுடையைச் சேர்ந்த திரு. தம்பிப்பிள்ளையின் மகள் பரஞ்சோதி என்கிற பத்தொன்பது வயதுள்ள பெண்பிள்ளை இளவாலைக் கன்னிகாஸ்திரீ மடத்திற் கல்வி பயில்வதற்காக ஏறக்குறைய 7 வருடங்களாக விடப்பட்டிருந்ததாகவும், இப்பிள்ளையின் தந்தை இறந்துவிட்டாரெனவுந் தெரிகிறது. இப்போது இப்பிள்ளையை அவளது தாயாரிடம் போகாமலிருக்கும்படி மேற்படி மட அதிகாரிகள் புத்திசொல்லித் தடுத்து மதமாற்றஞ் செய்வித்துத் தம் மடத்திலேயே வைத்திருக்கிறாகளென்றும் இந்த அநியாய நிலைமையினின்றும் அப்பிள்ளையை விடுவித்துத் தன்னிடந் தருமாறும் பிள்ளையின் தாயார் சைவபரிபாலன சபைக்கு ஓர் உருக்கமான கடிதம் எழுதியிருக்கின்றார். தமது அருமைப் பெண் குழந்தைகளைக் கத்தோலிக்க பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிவரும் பெற்றோர்கள் இதிலிருந்தாவது ஒரு தக்க பாடத்தைக் கற்றுக் கொள்வார்களா?

---

# 'சிங்களக் கூலிகள் தோட்ட வேலை செய்யமாட்டார்கள்'

## தேயிலை றப்பர்த்தோட்ட முதலாளிகள் கூட்டத்தில் நடந்த பேச்சு

கேகாலைத் தோட்ட முதலாளிகளின் கூட்டத்தில் புதிதாதச் சேர்ந்துள்ளவர்களாகிய சிங்கள மக்கள் தேயிலை, றப்பர்த் தோட்டங்களிற் செய்யும் வேலை திருப்திகரமானதோ என்றதையிட்டு விறுக்கள் எழுந்தன.

மேற்படி கூட்டத்தின் அக்கிராசனராயுள்ளவர் அங்குச் சமுகமாயிருந்த ஏனைய தோட்ட முதலாளிகளைப் பார்த்து, சிங்களக் கூலிக்காரர்களை எங்கள் தோட்டங்களில் வேலைக்காரராக ஏற்றுத் தோட்டவேலை செய்யும்படி இம்மாகாண உபதலைவர் கேட்கின்றார்.

**மிஸ்ரர். J. H. மில்ஸ்றன்:**

சிங்களக் கூலிக்காரர்களைப் போதிய அளவிற்குத் தேடிக்கொள்ளலாம்; ஆனால் அவர்களில் தேயிலை கொய்யக்கூடியவர்கள் எவருமில்லை

**அவைத்தலைவர்:**

எனது அனுவமும் அப்படித்தான்.

**மிஸ்ரர். H. W. கோர்ட்டன்:**

சிங்களப் பெண்கேள் வேலை செய்யாமற் கூலி வாங்கும் நோக்கமுடையவர்களாகக் காணப்படுகின்றார்கள்;

**மிஸ்ரர். H. C. ஜெடேல்:**

நான் ஒரு பிரிவில் முதன்முதல் 25 சிங்களக் கூலிகளை வேலைக்கெடுத்தேன், மாச முடிவில் அவர்கள் குறைந்து 3 பேர் தான் எஞ்சினார்கள். அப்படியிருப்பவும் அவர்களுக்கு விசேஷ சம்பளம் கொடுத்து வந்தேன்.

**மிஸ்ரர். விடி:**

அவர்களுடைய செயலைப் பார்க்க மனத்திற் பெரிய ஆத்திரம் உண்டாகின்றது; அவர்கள் குடியுள் ஒரு பலாப்பழம் பழுக்கத் தொடங்கிவிட்டால், அது பழுத்தபின் வெட்டித் தின்பதற்காக அங்கு எல்லாரும் காத்துக்கொண்டிருப்பாகள்; சிறிது மழைக்கோலங் காணப்பட்டால் அன்று முழுதும் வேலைக்கு வரமாட்டார்கள். அவர்களைஒருபோதும் நம்பியிருக்க முடியாது. ஆனுல் இப்படி அவர்களுக்கு வேலை கொடுக்கச் சொல்லி அரசினர் எங்களைக் கேட்பது முறையல்ல. அவர்களை வைத்துக்கொண்டு நாங்கள் என்ன செய்ய முடியும்?

---

### மன்னர் தம்பதிகள் பெல்ஜிய விஜயம்

**அடுத்த அக்டோபர் மாதம் நடக்கும்**

லண்டன் ஜூலை 4

வருகிற ஒக்டோபர் மாதம் 24ந் திகதி முதல் 27ந் திகதி வரையில் பிரஸ்ஸல்ஸுக்கு விஜயம் செய்யுமாறு கேட்டு பெல்ஜியதேச லியப்பால்டு மன்னர் தங்களுக்கு விடுத்துள்ள அழைப்பிற்கு மன்னர் தம்பதிகள் இணங்கியுளதாகப் பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து உத்தியோக முறையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8-ம் இலக்கச் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் திருகோணமலை 6 ம் நம்பர்ப் பெருந் தெருவில் முருகுப் பிள்ளை இராசலிங்கம் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:

1937 ம் ஆண்டு 2-ம் மாதம்

| இல | தி | ரூ | ச | நகைகளின் விபரம் |
|---|---|---|---|---|
| 2464 | 7 | 11 | 04 | வெ கல் காதோலை சோடி 1 |
| 2518 | 12 | 20 | 04 | இ கல் காதோலை சோடி 1 வெ கறிணை சோடி 1 க. இ. |
| 2526 | 12 | 75 | 04 | அச்சுக்காப்பு சோ 1 |
| 2531 | 13 | 50 | 04 | இ சங்கிலி அட்டியல் 1 |
| 2537 | 13 | 6 | 04 | நசி கூடு 1 |
| 2561 | 14 | 11 | | தாலி 1 தேனி |
| 2637 | 19 | 50 | 04 | டி இ முறிச்சுக் குத்தி அட்டியல் 1 |
| 2641 | 20 | 8 | | கோப்புச் சிமிக்கி சோடி ஒன்று |
| 2681 | 22 | 35 | | அச்சுக்காப்பு ஒய்றை |
| 2699 | 23 | 6 | 04 | இ கல் தோடு ஒய்றை |
| 2716 | 24 | 9 | | சிறு இகட்பு 1 |
| 2717 | 24 | 28 | | கற்ப்பின்கோர்க்கி 1 |
| 2741 | 27 | 6 | | சிறு கோப்புச் சிமிக்கி சோடி 1 |
| 2762 | 28 | 10 | | இ கல் கலாவனைக் குச்சுசோடி 1 அ வி |
| 2765 | 28 | 55 | | சோவி வட்டியல் 1 ட இ |
| 3-ம் மாதம் | | | | |
| 2795 | 2 | 9 | | டைமன் கோப்புச் சிமிக்கி சோடி 1 மு வி |
| 2814 | 3 | 90 | 04 | பவுனுடன் சங்கிலி 1 |
| 2835 | 4 | 75 | 04 | செ வே பவுனுடன் சங்கிலி 1 |
| 2843 | 6 | 13 | | பழைய செவ்வந்தித் தோடு சோடி 1 |
| 2846 | 6 | 20 | | கலாவனை மோதி 1 |
| 2864 | 7 | 48 | | இ கல் மோதிரம் 1 வெ கல் மோதிரம் 1 இகல் புறோச் 1 இருபட்டுக் கைச்சங்கிலி 1 |
| 2871 | 7 | 35 | | பொன்சாடு 1 பழுது |
| 2881 | 8 | 11 | 04 | வெ. கல் காதோலை சோடி 1 |
| 2915 | 10 | 32 | 04 | சங்கிலி 1 |
| 2949 | 12 | 17 | | இகல் கவுந்தோர் 1 |
| 2952 | 12 | 15 | 04 | இருதயம் 1 |
| 2973 | 14 | 100 | 04 | பூக்காப்பு சோடி 1 |
| 3077 | 16 | 20 | | மோதிரம் 1 |
| 3085 | 19 | 10 | | அரைப்பவுன் 1 |
| 3087 | 19 | 90 | 04 | இ கல் கவுந்தோர் 1 டி இ முறிச்சுக்குத்தி யட்டியல் 1 |
| 3080 | 22 | 5 | 50 | கோப்புச் சிமிக்கி விற் சோடி 1 |
| 3111 | 25 | 10 | 50 | புறத்தாலி 1 க வி இ கல் மின்னி சோடி 1 |
| 3166 | 29 | 12 | | இ கல் காதோலை சோடி 1 வெ கல் தொங்கட்டான் 1 |
| 3173 | 30 | 35 | 04 | பிலிக்காப்பு ஒய்றை |
| 4-ம் மாதம் | | | | |
| 3195 | 1 | 50 | 54 | டி இ முறிச்சுக்குத்தி யட்டியல் 1 |
| 3213 | 3 | 150 | 04 | அச்சுக்காப்பு சோ 1 அரசி 10 டலர் தாணயுடன் சங்கி 1 |
| 3222 | 3 | 18 | 04 | இ கல் பதக்கம் 1 |
| 3229 | 4 | 21 | 04 | செவ்வந்தித் தோடு சோடி 1 |
| 3246 | 4 | 12 | | மோதிர சோடி 1 |
| 3264 | 5 | 60 | | தங்கச்சங்கிலி 1 |
| 3274 | 6 | 70 | 04 | பூக்காப்பு சோடி 1 க 1 இ க வி |
| 3293 | 7 | 16 | | தாலித்தட்டு 8 தடம் 1 |
| 3296 | 7 | 8 | | வளையல் 4 |
| 3340 | 10 | 13 | | இ. காதோலைசோடி 1 க 1 இ |
| 3349 | 11 | 15 | 04 | இ கல் பதக்கம் 1 |
| 3353 | 11 | 200 | 04 | மாலை பதக்கமுடன் 2 பட்டுச் சங்கிலி 1 |
| 3390 | 12 | 17 | | தங்கக்காப்பு சோடி 1 கா 2 |
| 3412 | 14 | 19 | | தங்கப்பவுன் 1 |
| 3430 | 17 | 16 | | வெ கல் காதோலை சோடி 1 |
| 3445 | 18 | 9 | 04 | வெ கல் காதோலை சோடி 1 |
| 3462 | 19 | 6 | 04 | 1 கல் தோடு சோ 1 |
| 3472 | 19 | 22 | 04 | செவ்வந்தித் தோடு சோடி 1 |
| 3523 | 24 | 8 | | 1 கல்தோடு சோடி 1 பி சி 1 செ |
| 3531 | 24 | 30 | 04 | அச்சுக்காப்பு ஒய்றை |
| 3545 | 25 | 10 | | பொசதோடு சோ 1 |
| 3546 | 25 | 10 | 04 | து வை ½ பவுன் 1 |
| 3549 | 25 | 10 | 04 | கூடு 1 |
| 3565 | 26 | 10 | 04 | டிம்மியுடன் பழைய கல் பதக்கம் 1 |
| 3572 | 26 | 45 | | டி இ முறிச்சுக்குத்தி யட்டியல் 1 |
| 3594 | 30 | 17 | | வெ கல் கடுக்கன் சோடி 1 க இ |
| 5-ம் மாதம் | | | | |
| 3606 | 1 | 6 | 04 | பின்கோர்க்கி 1 |
| 3617 | 2 | 10 | 04 | அடித்தன மோதிரம் 1 |
| 3657 | 4 | 63 | 04 | 2 பட்டுக் கைச்சங்கிலி 1 சிறு தங்கச் சங்கிலி 1 |
| 3684 | 6 | 14 | 04 | வில் கப்பி செவ்வந்தித் தோடு சோடி 1 |
| 3714 | 8 | 66 | | டைமன்ட்டியல் 1 |
| 3783 | 13 | 12 | | செவ்வந்திக் தோடு சோடி 1 க 1 இ |
| 3792 | 14 | 9 | 04 | புறத்தாலி 1 |
| 3824 | 16 | 14 | 04 | சிறு அச்சுக் காப்பு ஒய்றை |
| 3830 | 16 | 18 | | கூடு 1 |
| 3874 | 19 | 6 | | அலுக்குத்து 2 கரை ஒன்றரை |
| 3898 | 20 | 18 | | செவ்வந்தித் தோடு சோடி 1 |
| 3929 | 23 | 100 | 04 | பென்டனுடன் சங் 1 |
| 3930 | 23 | 120 | 04 | பதக்கமுடன் கல் முத்து அட்டியல் 1 |
| 3934 | 23 | 57 | 04 | கெட்டிக்காப்பு 1 |
| 3965 | 25 | 51 | | அரைப் பவுனுடன் சங்கிலி 1 |
| 4013 | 28 | 9 | 04 | 1 கல் தோடுசோடி 1 |
| 4029 | 29 | 45 | | நெல்லிக்காப்பு ஒய்றை |
| 4050 | 31 | 60 | 04 | கெட்டிக் கோலிசு ஒய்றை |
| 6-ம் மாதம் | | | | |
| 4081 | 2 | 9 | 04 | கோப்புச் சிமிக்கி சோடி 1 |
| 4096 | 4 | 60 | 04 | கெட்டிக் கோலிசு ஒய்றை |
| 4099 | 4 | 8 | 04 | மோதிரம் 1 ந சி |
| 4106 | 5 | 17 | 04 | இ கல் கவுந்தோர் 1 |
| 4120 | 6 | 10 | | இ கல் காதோலை சோடி 1 |
| 4129 | 6 | 18 | 04 | இ கல் காதோலை சோடி 1 |
| 4135 | 6 | 25 | | நெல்லிக்காப்பு ஒய்றை |
| 4159 | 8 | 11 | | இ கல் வில் சுடுக்கன் சோடி 1 க1இ |
| 4190 | 10 | 90 | | முறிச்சுக்குத்தி அட்டியல் 1 டி இ |
| 4192 | 10 | 6 | | தாலி 1 |
| 4229 | 12 | 10 | 04 | இ கல் முகப்பு 1 |
| 4232 | 13 | 16 | | செவ்வந்தித் தோடு சோடி 1 க இ |
| 4353 | 13 | 8 | | வெ கல் கலாவனைக் குச்சு சோடி 1 |
| 4256 | 13 | 40 | 04 | தங்கக்காப்பு சோடி 1 பூ இ |
| 4299 | 16 | 30 | 04 | நெளிக்காப்பு ஒய்றை |
| 4324 | 17 | 8 | | பாதசரம் சோடி 1 |
| 4380 | 20 | 10 | 04 | வெ கல் காதோலை சோடி 1 |
| 4382 | 20 | 15 | 04 | பழைய கல் தோடு சோடி 1 |
| 4398 | 21 | 16 | 04 | தங்கமோதிரம் 1 |
| 4415 | 22 | 6 | 04 | அருங்கோல் சோடி 1 |
| 4455 | 25 | 80 | | தாலிக் கொடி 1 |
| 4467 | 26 | 10 | 04 | து வை க அரைப் பவுன் 1 |
| 4463 | 26 | 8 | | உடை பொன்தோடு சோடி 1 |
| 4504 | 28 | 12 | | தகடுடன்கூடு 1 மு இ சுரை பொன் |
| 4514 | 29 | 7 | | சிறு தங்கமோதிரம் 1 |
| 4520 | 29 | 65 | | இ கல் முறிச்சுக் குத்தி அட்டியல் உடன் பத 1 |
| 4523 | 29 | 18 | 04 | தங்கப்பவுன் 1 |
| 4524 | 29 | 60 | | சிறுதாலிக்கொடி 1 |
| 4526 | 30 | 9 | 04 | மு வி பழைய பதகோதம்பை மணிக் கோர்வை 1ல் தட்டு 12 |
| 4540 | 30 | 14 | 04 | இ கல் சிகப்புக்கடுக்கன் சோடி 1 க இ |
| 7 ம் மாதம் | | | | |
| 4548 | 1 | 40 | 04 | அச்சுக்காப்பு ஒய்றை |
| 4555 | 1 | 9 | 04 | செவ்வந்தித் திருகு பூ 1 |
| 4566 | 2 | 7 | | வெதனல் காப்புச் சோடி 1 த இ பொ படிக்கூர் 1 கா வெ. |
| 4597 | 4 | 10 | | கூடு 1 |
| 4605 | 5 | 125 | | முறிச்சுக்குத்திக் கொடி 1 |
| 4608 | 5 | 50 | 04 | அச்சுக்காப்பு சோ 1 |
| 4620 | 6 | 20 | | வெ து வை த பவுன் 1 |
| 4632 | 6 | 9 | 04 | தகடுடன் கூடு 1 |
| 4634 | 6 | 15 | 04 | மோதிரம் 1 |
| 4647 | 7 | 12 | 04 | இ கல் மோதிரம் 1 |
| 4649 | 7 | 8 | | இ கல் கவுந்தோர் 1 கா வெ |
| 4671 | 9 | 110 | 04 | பழையகல் பதக்கமுடன் முறிச்சுக்குத்தி யட்டியல் 1 க இ |
| 4675 | 9 | 15 | | செவ்வந்தித் தோடு சோடி 1 |
| 4705 | 12 | 34 | | நெளிக்காப்பு |
| 4724 | 14 | 9 | 04 | சங்கிலித்துண்டு 1 |
| 4793 | 17 | 18 | 04 | மோதிரம் 1 |
| 4799 | 18 | 20 | | மோதிரம் 1 |
| 4808 | 19 | 10 | 25 | அரைப் பவுனுடன் பாசி மணிக் கோர்வை 1 |
| 4874 | 25 | 90 | 04 | 1 பட்டிலே மாலை 1 சிறு சாமத்திப்பு 1 இ படிக்கூர் 1 கா வெ கவி டைமன் கோப்புச் சிமிக்கி சோடி 1 |
| 4876 | 25 | 80 | 04 | பிலிக்காப்பு சோ 1 |
| 4879 | 25 | 30 | | சங்கிலி 1 து இ |
| 4944 | 31 | 6 | | தாலி 1 |
| 4945 | 31 | 17 | | கைவிலங்கு 1 |
| 4951 | 31 | 10 | 04 | இ கல் மோதிரம் 1 |
| 4955 | 31 | 10 | 25 | இ கல் கூட்டுப் பத 1 |

விற்பனவு பிரமாதி வருடம் ஆடிமாதம் 10-ந் திகதித்தர்சரியான (26-7-39) புதன் கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறீங்கலாக மீதி மேற்படி கடையிற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ந. பாலசுப்பிரமணியம்
ஏலத் தலைவர்

திருகோணமலை
6-7-39

Mis 84 10—13-7-39

## அலவாங்கால் அடித்துக் காயம் விளைத்ததாக

### கரையூர் வாசிகள் விடுதலை செய்யப்பட்டனர்

கரையூரில் வசிக்கும் வண்ணார் வகுப்பைச்சேர்ந்த (1) அந்தோனிப் பிள்ளை (2) செபமாலை (3)ஞானசை ஆகியவர்கள் சென்ற 1928ம் ஆண்டு மே மீ 10ந் திகதி அவ்விடவு சின்னத்தம்பி சந்தியாப்பிள்ளைக்கு ஓர் அலவாங்கால் பொல்லால் அடித்துக் காயப்படுத்தியதன் நிமித்தமாகக் கொலை செய்ய எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்கில் ஜூரிமார் ஏகமனதாக எதிரிகளைக் குற்றவாளிகள் அல்லவெனக் கூறினர். நீதியரசர் அவர்களை விடுதலை செய்தார். க. கி.

## ஆகாயவசனி அறிக்கைகள்

2-ம் பக்கத் தொடர்ச்சி

9-15 வர்த்தமானமும் வானிலைவிபரமும்
9-30 ஐரோப்பிய சங்கீதம்
10 30 முடிவு

### மதராஸ் 2

60. 98 மீட்டர்கள் (வி/4920 கி சை)

டிரான்ஸ்மிஷன் 1

மாலை
4-00 4-30 மதராஸ் 1ல் இருக்கிறபடி

டிரான்ஸ்மிஷன் 2

5-00 6-00 மதராஸ் 1ல் இருக்கிறபடி
6-00 "லவகுசா"
6-35 கடப்புலிலே வாசிகளும் அறிவிப்புகளும்
6-45 9-30 மதராஸ 1ல் இருக்கிறபடி
9-30 ஸ்ரீ வி சேதுராமையாவும் ஸ்ரீ ஆர் கே வெங்கட்ராமசாஸ்திரியும் பதினொருசந்தி பிடில்கள்
10-30 முடிவு

### திருச்சினப்பள்ளி

397 மீட்டர்கள் (வி/758 கி சை)

டிரான்ஸ்மிஷன் 1

பகல்
2-00 சாதாரண சேர்மானங்கள் ஸ்ரீ பி வி சோமநாத ஸ்ரீ மண்டலும் கிளாரினெட் பியானோ சபேஸா வியாஸ் சகோதரர்கள் ஜலதரங்கமும் மாண்டலினும்
2-15 பைரவி ஸ்ரீ டி செனடையா பிடில் ஸ்ரீ செம்மை வைத்தியநாத பாகவதர் வாய்ப்பாட்டு ஸ்ரீ எல் நாராயண அய்யங்கார் கோட்டுவாத்தியம் ஸ்ரீமதி வீணை தனம்மாள் ஸ்ரீமதி கே பி சுந்தராம்பாள் வாய்ப்பாட்டு
2-45 அ இ சே விதவான் தமிழ்ப்பதங்கள்
3-00 முடிவு

டிரான்ஸ்மிஷன் 2

மாலை
6-00 கிராமாந்தர நிகழ்ச்சிகள் வாத்தியசங்கீதம் நாட்டுப்புற தண்ணீர் விநியோகம்
6-30 ஸ்ரீ டி என் குப்புசாமி நாதசுரம்
7-00 திருச்சி ரேடியோ நாடகமண்டலம் "உயிரை வாங்கிய சிலம்பு"
7-30 ஸ்ரீமதி என் என் தங்கம் வீணையும் வாய்ப்பாட்டும்
8-00 ஸ்ரீ டி என் குப்புசாமி நாதசுரம்
8-30 வாத்திய சங்கீதம்
8 45 ஸ்ரீமதி என் எஸ் தங்கம் வீணையும் பாட்டும்
9-15 ஆங்கிலத்தில் வர்த்தமானம்
9-30 முடிவு

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் வண்மேற்கு சோனகதெரு சோமசுந்தரம் புண்ணியமூர்த்தி என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படிசட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்

| இல | திகதி. | தொகை: | விபரம் |
|---|---|---|---|
| 4239 | 11-11-37 | 8 | சு. வைரவநாதன் வண்கிழக்கு ஒற்றைக்கல் திருகில்லாத சிவப்புக்கல் பொன் ஒலை இரண்டு |
| 4243 | 12-11-37 | 24 | மு முத்துமுகம்மது சோனகதெரு பொன் பூசாந்திரம் ஒன்று மணி நாலும் இ பொன் திருக்கண்டமாலை 13ம் |
| 4373 | 22-12-37 | 10 | மு முத்துமுகம்மது சோனகதெரு ஒரு தாயத்துடன் இ பொன் மணிக்கோர்வை ஒருபட்டு |
| 4494 | 16-2-38 | 15 | மு. வீரவாகு அராலி தெற்கு ஒய்றைக் கல்லும் திருகுமில்லாத சி. கல் பொன் தலை சோடி 1 |
| 4507 | 18-2-38 | 10 | மு. முத்து முகம்மது சோனகதெரு குக்கத்துடன் வெ. கல் கலாவனைக் குச்சு இரண்டு |
| 4615 | 28-3-38 | 12 | சு முகம்மது மெயிதீன் சோனகதெரு பொன் பின்கோர்க்கி 1 |
| 4617 | 23-3-38 | 11 | பொ. இராமநாதன் வண்மேற்கு பொன்மோதிரம் 1 |
| 4747 | 16-6-38 | 45 | சு. கூலர்தான் முகியதீன் சோனகதெரு ஒரு இ. பொன் சவடி முகப்புடன் இ பொன் பழுதுபட்ட கொடி 1 |

விற்பனவு நிகழும் பிரமாதி வருடம் ஆடி மாதம் 9-ந் தேதி (24-7-39) திங்கட் கிழமை காலை 9 மணியளவில் எடுபட்ட நகை பிறீங்கலாக மீதி மேற்படியாரிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்
வேந்தில்மேல்தர்

Mis 83 10—13-7 39

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு மு. சோம. அ. சோமசுந்தரம் செட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1938ம் ஆண்டு ஏப்ரல் மாதம்

| கா. | தி. | ரூ: | ச | ஊரும் பெயரும் நகை விபரம் |
|---|---|---|---|---|
| 6088 | 2 | 6 | 50 | பலாலி வெ தம்பிரம்பிள்ளை இமி வெள்ளைக்கல் காதக்குச்சி சோடி 1 |
| 6131 | 6 | 21 | | தலையாளி சி சுப்பிரமணியம் இமி கல் அச்சாக் கூடு 1 |
| 6135 | 6 | 30 | | பலாலி வெ தம்பரம்பிள்ளை பிள்ளைக்காப்பு சோடி 1 |
| 6 59 | 8 | 10 | | கீரிமலை வ காசிப்பிள்ளை மாற்றவிட்ட கிளாவர் மோதிரம் 1 |
| 6160 | 8 | 58 | | சோனகதெரு அ முகையதீனப்துல்லா அரைப்பவுண் கோர்த்த சங்கிலி 1 |
| 6196 | 11 | 17 | | மட்டுவில் தெற்கு க சின்னத்துரை மோதிரம் 1 |
| 6233 | 12 | 16 | | பண்டத்தரிப்பு சி பொன்னுத்துரை தாலி 1 |
| 6236 | 14 | 14 | | வண்மேற்கு பொ இராமநாதர் இமி நீலக்கல் மோதிரம் 1 |
| 6245 | 12 | 12 | | மூளாய் செ கணபதிப்பிள்ளை மனுக்கள் சிகப்புக்கல் காதோலை சோடி 1 |
| 6256 | 15 | 6 | | கோப்பாய் தெற்கு ஞானசேகரதன் இமி வெள்ளைக் கல்தோடு சோடி 1 |
| 6270 | 16 | 118 | | தலையாளி சி சுப்பிரமணியம் குண்டு இரண்டு சேர்த்த சங்கிலிக் கொடி 1 |
| 6272 | 16 | 13 | | நவாலி சீ தாவீது மனுக்கள் சிகப்புக்கல் காதுப்பூம் காட்டுக்குடுக்கன் சோடி 1 |
| 6307 | 19 | 10 | | சோனகதெரு மு. முகம்மது யூசுப்பு இமி கல் புரோச் 1 |
| 6310 | 20 | 74 | | பெருமாள் கோவிலடி வீ கந்தையா இமி கல் முகப்புடன் அச்சுக்காப்பு சோடி 1 |
| 6398 | 29 | 11 | | கோண்டாவில் மேற்கு இ கந்தையா தாலி 1 |
| 6407 | 30 | 12 | | சோனகதெரு அ முகையதீனப்துல்லா பிள்ளைக் காப்பு சோடி 1 |
| 6411 | 30 | 90 | | கோண்டாவில் மேற்கு க அப்பாத்துரை இமி கல் வைத்த அச்சுக்காப்பு சோடி 1, மேற்படி கல் கவுத்தோர் 1, பிள்ளைக்காப்பு சோடி 1 |
| 6413 | 30 | 7 | | மயிலேஸ்வேட்டை ஜன் அ காலேக்திரம் இமி கல் மோதிரம் 1 |
| மே மாதம் | | | | |
| 6442 | 3 | 6 | | கொடிகாமம் அ கந்தையா மனுக்கள் சிகப்புக்கல் காதோலை சோடி 1 |
| 6462 | 5 | 8 | | மாவிட்டபுரம் அ செல்லையா இமி வெள்ளைக்கல் மோதிரம் 1 |
| 6519 | 12 | 42 | | கொக்குவில் மேற்கு செ செல்லையா இமி வெள்ளைக் கல் வைத்த அச்சுக்காப்பு சோடி 1 |
| 6551 | 16 | 28 | | வண்மேற்கு சி அப்பையா சிகில் மோதிரம் 1 |
| 6571 | 18 | 13 | | நல்லூர் மு மாணிக்கம் தாலி 1 |
| 6643 | 25 | 67 | | நவாலி தெற்கு கு சிவலிங்கம் சாதா அச்சுக்காப்பு சோடி 1 |
| 6665 | 27 | 44 | | மயிலிட்டி வடக்கு ச கந்தன் சாதா கம்பிப்பூரான் அட்டிகை 1, மனுக்கள் சிகப்புக்கல் காதோலை சோடி 1 |
| 6666 | 27 | 28 | | சண்டிலிப்பாய் அ நவரத்தினம் சாதா வளையல் காப்பு 1 |
| 6679 | 29 | 11 | | வண்கிழக்கு அ நாகமுத்து குண்டு 4, இமி கல் காதுக்குச்சி சோடி 1 |
| 6671 | 31 | 24 | | நவாலி கா சின்னத்தம்பி இமி கல் கவுத்தோர் 1 |

விற்பனவு: பிரமாதி வருஷம் ஆடி மாதம் 9ம் திகதி (24-7-39) திங்கட் கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறீங்கலாக மீதி மேற்படியாரின் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்நிஸ் மேஸ்தர்,

Mis 85. 10,—13-7-39

## சிவதொண்டர் பெருமை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளம் விளங்கத்தக்கதாகச் செய்யுள்கள் யாக்கப்பெற்றிருக்கின்றன.

"முன்னையவனுடைய
நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும்
வண்ணங் கேட்டாள்;
பின்னையவனுடைய வாரூர்
கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே
பிச்சி யானாள்,
அன்னையையு மத்தனையு
மன்றே நீத்தாள்
அகன்றாளகலிடத்தா
ராசாரத்தைத்
தன்னை மறந்தாள்
தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை
தலைவன் றாளே"

என்ற திருத்தமிழ்த் தேவாரம் இதற்கோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இறைவனுக்குக் குங்குலியத்தூபமிட்டு வந்த ஒரு பக்தர் வறுமையால் கலிவுற்றார். அவர் பிள்ளைகள் பட்டினியால் வருந்தப்படுவதை யுணர்ந்த அவர் தம் மனைவி தன் மங்கலியத்தை அவிழ்த்து நாயகன் கையிற் கொடுத்து இதை விற்று நெல் வாங்கி வருகவெனக் கூற அவரும் உடன்பட்டுச் சென்றவர், மங்கலியத்தை விற்று நெல் வாங்குதற்குப் பதிலாக இறைவனுக்குக் குங்கிலியம் வாங்கிக் கொடுவந்து தம் நியதி தவறாமல் குங்குலியத் தூபமிட்டு மகிழ்ந்தாரென்றால், சிவதொண்டர்களின் பெருமை - அவர்தம் பக்தியின் பரிசை - நாம் வாயாற் புகழ்ந்து பேசமுடியுமோ? அவர்தம் பெருமைகளையெல்லாம் நீங்கள் பெரியபுராணத்திற் பார்க்கக்காண்பீர்கள்.

சிவபிரானை வழிபட்டுப் பரகதியடைந்த சிவதொண்டர்களையன்றி, சிவதொண்டர்களை வழிபாடுசெய்து பரகதியடைந்த பக்தர்களும் பலருளர். அறுபான்மும்மை நாயன்மார்களில், சிவதொண்டர்களை வழிபட்டுய்ந்தவர்கள் பத்தொன்பதின்மர் என்று உமாபதி சிவாசாரியார் எமக்குக் கணக்கிட்டுக் கூறுகின்றார். "திருநீலகண்டர், இயற்பகையார், மூர்க்கர், சிறுத்தொண்டர், திருக்குறிப்புத்தொண்டர், விறன்மிண்டர், அருள் சேரும் இடங்கழியார், முனையடுவார், சத்தி, அமர்நீதி, மெய்ப்பொருளார், எறிபத்தர், கரைசேரும் புகழ்ச் சோழர், கஞ்சாறர் (இளையான்குடி) மாறர், காரைக்காலம்மை, நமிநந்தி, கலிக்கம்பர், வருநேசர்" என்றார் பத்தொன்பதின்மருமே அவைவர். சிவதொண்டர்கள் என்றால் அடித்தால் அழமுடியாத அத்தனை வலியற்றவர் என்றும் பேடிகள் என்றும் ஒருசிலர் கருதிவிடுகின்றார்கள். இந்த நாயன்மார்களிற் பலர் பெரிய போர்வீரர்கள். முனையடுவார் என்னும் பெயரே அவர் போர்முனையிற் பகைவரை எதிர்த்து யுத்தஞ் செய்யும் ஆற்றல் பெரிதும் படைத்தவர் என்பதைக் காட்டுகின்றது. அவ்வாறே அவர் செய்தும் வந்தார். எறிபத்தரின் பெயரைக் கேட்டாலுமே சிவனடியார்க்குத் தீங்கிழைப்பவர் அஞ்சுவர். விறன்மிண்டாது அடியார் பக்தியினாலேயே நாம் தெய்வச் சேக்கிழார் செய்தருளிய திருத்தொண்டர்புராணத்தைப் பெற்றிருக்கின்றோம் என்று கூறின் அது மிகையாகுமோ? சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணம் ஆகிய விரிநூலைச் செய்தற்கு நம்பியாண்டார் நம்பிகள் வகைநூலாகிய அந்தாதியைப் பாடுதற்கும் மூலமாக இருந்து உதவிய திருத்தொண்டத்தொகையைத் திருநாவலூரர் பாடுதற்கு இவ் விறன்மிண்டாது அடியார் பக்தியே காரணமாக இருக்கது என்று கூறப்படுமாயின் அவர் தம் பெருமை எத்தகைய தென்பது எமக்குத் தெற்றென விளங்கும். புகழ்ச்சோழர் என்னும் அரசர் தமதுபடைவீரர் பகைவரொடு பொருதுவெற்றிபெற்று மீண்டவழி, அவர்கள் கொண்டுவந்த தலைகளுள் சடையுடைய தலையொன்றைக் கண்டதும் "ஆ! என் செய்தேன், கெட்டேன். சிவதொண்டர் ஒருவரை என் படையினர் கொன்றொழித்தனரோ" என்று பதைத்து அத்தலையோடு அக்கினிப்பிரவேசஞ் செய்தார் என்றால், சிவதொண்டர்களை அவர் போற்றிவந்த செம்மையை நாம் கண்டுணர்ந்து கொள்ளலாம். அதனால் என்றும் அழியாத பெரும் புகழையும் இறைவன் பேரருளையும் பெற்றுயந்த அவர் தம் பெருமையையும் உணர்ந்து கொள்ளலாம். இவ்வாறே இப் பத்தொன்பதின்மரில் ஏனையோர் பெருமையையும் கண்டுணர்க. இவரல்லாத ஏனைய சிவதொண்டர்கள் பெருமையையுங் கண்டுணர்க.

"ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ?"

அவர்கள் பூசுநீறுபோல் உள்ளும் புனிதர்கள் கேடும் ஆக்கமுங்கெட்ட திருவினர். அவர்கள் அன்பினாற் கும்பிடுதலின்றி வீட்டின்பத்தைத் தானும் வேண்டாத விறலினர் என்றால் அவர்தம் பெருமைகூற யாமோ அருகதையுடையோம் என்று கூறி இவ்வாறே பல உதாரணங்களை எடுத்துக்காட்டி விளக்கிச் சபையோரை மகிழச் செய்து தமது பிரசங்கத்தை முடித்தனர்.

பின் தலைவர் அவர்கள் பிரசாரகருக்கும் சபையோருக்கும் நன்றி கூறியபின் தேவாரபாராயணத்தோடு கூட்டம் 9½ மணியளவில் இனிது நிறைவெய்தியது.

## இலங்கை வங்கி டைரக்டர்கள்

### தேசாதிபதிக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளவர்கள்

தொழில் மந்திரி திரு. ஜீ. வி. எஸ். கொறியா இலங்கை வங்கிச் சட்டத்தின் கீழ்த் தமக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு இலங்கை வங்கிக்கு முதல் டைரக்டர்களாக நியமனஞ் செய்ய ஐந்து பேர்களை மேன்மை தங்கிய தேசாதிபதிக்குத் தாம் சிபார்சு செய்திருப்பதாகத் தொழில் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களுக்கு அறிவித்திருக்கிறார் எனத் தெரிகிறது.

மந்திரி சிபார்சு செய்தவர்களின் பெயர்கள் வருமாறு:- சேர். முகம்மது மாக்கான் மரைக்கார், திரு. ஏ. ஈ. டி. சில்வா, எச். வி. பெரேரா திரு ஜே. தியாகராசா, திரு. எச். டப்ளியு. பீரிஸ்

## பசுக்களுக்குப் பொய்ப்பல்

### உக்ரேனிய பல்வைத்தியர் முயற்சி

மஸ்கோ ஜூலை 4—

அண்மையில் நடந்து வரும் விவசாயக் காட்சியில் பொய்ப் பற்களைக் கொண்ட மூன்று பசுக்கள் காட்சி செய்யப்படும்.

ஒரு உக்ரேனிய பல்வைத்தியர் கிழட்டுக் காளையொன்றுக்குப் பொய்ப்பற்களைப் பூட்டி அதனால்வெற்றிகரமான பயனேற்பட்டது. இந்த மாதிரிப் பசுக்களுக்கும் பொய்ப் பற்களைப்பூட்டி அவைகளின் பிரயோசனத்தை அதிகரிக்கலாமென்று அவர் தீர்மானித்தார்.

## காஷியரின் பணம் மறைந்த மாயம்

### மேர்க்கண்டைல் வங்கியில் நிகழ்ந்த சம்பவம்

கொழும்பிலுள்ள வில்லியம் பீரிஸ் அண்டு கம்பெனியின் காஷியர் திரு. வீ. இராஜரத்னம் நேற்று முன்தினம் காலை கோட்டையிலுள்ள மெர்க்கண்டைல் வங்கிக்குச் சென்றிருந்தார். வங்கியிற் சிறுப்பர் பணம் கொடுக்கல் வாங்கல் செய்யுமிடத்தில் அவர் தம்மிடமிருந்த பணத்தை எண்ணிக்கொண்டிருக்கையில் இரு ஐம்பது ரூபாய் நோட்டுகள் மாயமாய் மறைந்து விட்டதைக் கவனித்தார். உடனே அவர் இது விஷயத்தை வங்கி அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்.

இதற்கிடையிற் பணத்தைக் கொடுக்கும் சிறுப்பர்களில் ஒருவர் வேஷ்டி கட்டிய ஒரு மனிதன் பணம் எண்ணும் இடத்தைவிட்டு நகர்ந்து சென்று சிறிது தூரத்திற்கப்பாலிருந்த ஒரு வாங்கின் மீது உட்காருவதையும் கவனித்தார். சிறுப்பர் குறித்த மனிதன்மீது சந்தேகப்பட்டு விஷயத்தை அதிகாரிகளுக்குத் தெரிவித்தார். பின்னர் இரு 50 ரூபாய் நோட்டுகளும் குறித்த மனிதனிருந்த வாங்கின் கீழ்க் கிடந்து கண்டெடுக்கப்பட்டன. சந்தேகப் பேர்வழி உடனே கைதுசெய்யப்பட்டார்.


# யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134,36700
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சாரசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக் கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்து கோள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

47. 21-11-38—20-11-39
திங்.



யாழ் நகரில் சுத்தமான கோதுமையினால் தின் பண்டங்கள் முதன்மையாய் விற்குமிடமெது?

1865ம் ஆண்டு எஸ். பேதுருப்பிள்ளை அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற தற்போது தி பிறிமியர் பேக்கரி என அழைக்கப்படும் றொட்டிச்சாலை மாத்திரமே



இங்கே சுத்தமான கோதுமை அப்பம் விஸ்கோத்து வகைகளும், இனிமையான கேக் சிற்றுண்டி வகைகளும், நவீன முறையில் சுகாதார விதிப்படி மதக் கோட்பாடுகளுக்கு எதிர்ப்பில்லாத சேர்ப்புகளினால் தயாரிக்கப்பெற்ற மட்டான விலையில் விற்கப்படும்.

கலியாண காலங்களுக்கும், கல்லூரி ஆண்டுவிழாக் கொண்டாட்டங்களுக்கும் முக்கியமான சிற்றுண்டி விருந்துகளுக்கும், கேக், அதிரச வகைகள் மதுரமாயும் கவர்ச்சியாயும் அதிக சகாய விலைக்கு உடன் தயாரித்துக் கொடுக்கப்படும்.

**The Premier Bakery**
(பேதுருப்பிள்ளை றொட்டிச்சாலை.)
Bakers—Confectioners—Caterers

Bankshall Street Estd. 1865. Jaffna 'Phone. 44.

Y 160 29-9-38—28-9-39 தீ


## அடைவுநகை விற்பனவுவிளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் வல்வெட்டித்துறை வே. வ. சிவப்பிரகாசம் அவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்

| ந. தி. ந. ச. | பெயர் | ஊர் | நகைவிபரம் |
|---|---|---|---|
| 1937 ஆடி | | | |
| 1193 10 15 | வேலன் கிட்டினன் | | சமபாத அட்சரம் |
| புரட்டாதி | | | |
| 1299 13 10 | வேலும்மயிலும் வெங்கடாசலம் | வல்வெட்டித்துறை | வெள்ளைக்கல் தோடு சோடி 1 |
| 1315 19 15 | மயிலன் சின்னத்தம்பி | | சமபாத அச்சரம் |
| 1938 மாசி | | | |
| 1562 21 25 | கனகசுந்தரம் சிவகாமிப்பிள்ளை | வல்வெட்டித்துறை | கிச்சி 1 |
| 1567 23 20 | கனகசுந்தரம் சிவகாமிப்பிள்ளை | ,, | கிரிப்பல்லுட்கட்டு |
| பங்குனி | | | |
| 1610 18 23 | கந்தவனம் சுப்பிரமணியம் | வல்வெட்டித்துறை | மோதிரம் 2 |
| சித்திரை | | | |
| 1633 1 67 23 | மயிலன் தம்பன் | வல்வெட்டித்துறை | தாலிக்கொடி |
| 1652 11 6 | மாரிமுத்து தங்கம்மா | ,, | பதக்கம் |
| 1665 18 7 | நடராசா தங்கன் | ,, | கிச்சி 1 |
| வைகாசி | | | |
| 1725 17 20 | சிற்றம்பலம் வள்ளியம்மாள் | ,, | சங்கிலி 1 |
| ஆனி | | | |
| 1758 1 10 | பூதன் அம்மிணி | ஊரிக்காடு | பதக்கம் |
| 1772 8 8 | சரவணமுத்து வள்ளிப்பிள்ளை | வல்வெட்டித்துறை | கப்றேடுசோ 1 |
| 1803 25 8 | பொன்னுத்துரை பூரணம் | ,, | கப்றேடுசோடி 1 |

விற்பனவு நிகழும் பிரமாதி வருடம் ஆடி மாதம் 6-ம் திகதிக்குச் சரியான (22.7.39) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் ஏடுபட்டநகை பிறசீக்கலாக மிகுதி மேற்படியார் வீட்டிற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வ. மு. கந்தசாமி
வெந்திஸ்மேஸ்தர், வல்வெட்டித்துறை

Mis 77 6—10.7-37


# N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo

Telephone No. 30.

(Y 65 1-4-38—31-3-39) தி



யாழ்ப்பாண
# ஐக்கிய வியாபாரச் சங்கம்

[வரையறுத்து]

1918—ம் ஆண்டு ஸ்தாபிதமானது

அதிகாரம் பெற்ற மூலநிதி ரூபா—100,000
100 ரூபா விகிதமான 1000 பங்குகள்
சேமநிதி 23237—39

சென்ற 19 வருஷங்களுக்குக் கொடுபட்ட லாபம் ரூபா 800,00-00

வட இலங்கையில் நம்மக்களால் ஒன்றுகூடி நடத்தப்படும் வியாபார நிலையம் இதுவொன்றே. தேசிய முன்னேற்றத்தை நோக்கி உங்களுடைய மிச்சங்களைக் கொண்டு சங்கத்தில் பங்குகளை எடுத்து வியாபாரத்தை மேலோங்கச் செய்வதற்கு முன்வாருங்கள். அத்துடன் கடையிற் சாமான்களை வாங்கி ஆதரியுங்கள். சென்ற வருஷங்களுக்கு நல்ல லாபங் கொடுபட்டன.

(Y. 175. 24-10-38 to 23-10-39.) (தி)




# கேரள வெப் சோப்

சருமத்திற்கு உற்சாகம் விளைக்கக் கூடிய உயர்தாமானது

அழகான பெண்களுக்குரிய சோப்

எங்கும் கிடைக்கும்

ஏஜென்ஸ்: **தேவார் அன் கம்பனி,** மெயின் ஸ்ரீட், கொழும்பு

Mis 159, 17-11-38—



சுகபோகமான ஸ்நானத்திற்கு

# ஸிப்ரா

டொயிலெற் சவர்க்காரம்




சிறந்தது எது என்று கண்டு பிடிக்கும் பொது ஜனங்களுக்கு

இதுவரை எவரும் தர முன்வராத

மிகச் சிறந்த சவர்க்காரம்;

சரீரத்தி லுள்ள தோஷேச்

சுத்த மாக்கு கின்றது;

மென்மை யாக்கு கின்றது;

வசமாகுந் தன்மையும்

வசீகரமு மடையச் செய்கின்றது.

**பெங்கால் கெமிக்கல் & பாம கோட்டிக்கல் லிமிற்றெட்**

கல்கத்தா; பம்பாய்.

இலங்கை ஸோல் ஏஜண்டுகள்: **தி யூவணற்றெட் ட்ரேடிங்கம்பெனி,** தபாற்பெட்டி 377, கொழும்பு.

Mi-159. 10-9-37—



## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். அனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, துந்துமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிரானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்லஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பு, லக்கபஸ்பம், அக்கரல்லிபர், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனுல் கிராழிவு, நீர்க்கடுப்பு, கிராடைப்பு, மூலநுடு, இருவதுவுத்தியுதுள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் மேய்த்தச் சொல்லியவியாதிகள் குணமடைவதுடன் சூதகவாயு பிரசவமுறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும்பெறுவார்கள். பால்விருத்தியாகும்

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா **20.** அரை ருத்தலுக்கு ரூபா **10.** கால்ருத்தலுக்கு ரூபா **5** தபாற்செலவுபிரத்தியேகம்

சிங்கப்பூர் பினுங்கு முதலிய தொடுவாய் இராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததனுல் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,

க. ஆறுமுகம்பிள்ளை

ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய வைத்தியசாலை,

வீட்டிலக்கம் 33, பழையவாடி றேட்டு, கோட்டைமுனை, மட்டக்களப்பு, சிலோன்.


மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
எந்நோற்றுன் கொல்லென் னுஞ் சொல்

## காங்கிரஸ் புரட்சி ஸ்தாபனமாக மாறிவிடும்

### முன்னேற்றக் கட்சி அவ்வேலையைச் செய்யுமாம்

பம்பாய் ஜூன் 30

புதன்கிழமையிரவு ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் பேசுகையில் எதிர்கள் காங்கிரஸ்மூலம் இந்திய தேசியக்கட்சிகளைச் சீக்கிரம்புரட்சி ஸ்தாபனமாக மாற்றி விடுவார்களென நம்புவதாக அறிவித்தார்.

“பூர்ண சுயேச்சைக்குத்தீவிரமான போராட்டமொன்று ஆரம்பிக்க இதுவே தருணமென்பது எனது நம்பிக்கை. பிரபல காங்கிரஸ் தலைவர்கள் பலர் அவ்விதம் நம்பவில்லை. இத்தருணத்தைக் கைவிட்டால் பிரிட்டனிடம் பூரண சுயேச்சைகேட்கச் சிறந்த சந்தர்ப்பமொன்றை இழந்துவிடுவோம். சில காங்கிரஸ் மாகாணங்களில் அடக்குமுறைச்சட்டங்கள் ரத்தாகவில்லை. எதிர்கள் கட்சி காங்கிரஸில் புத்துயிர் ஏற்படுத்தும்” என்றார்.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டகோச் சட்டத்தின்படி லைசென்சு பெற்ற அடைவுபிடிக்கும் திரிகோணமலை பெரியகடை காசுக்கடை வீதி முருகுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படிசட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1938ம் ஆண்டு 1ம் மாசம்

| இல. | தி. | ரூ. | ச. | நகைகளின் விபரம் |
|---|---|---|---|---|
| 1625 | 1 | 15 | | சவுக்கமணிக் கோர்வை 1ல் மணி 19 |
| 1627 | 1 | 14 | | சிறு தங்கக்காப்பு சோடி 1 பூ இ |
| 1643 | 2 | 9 | | துப்பக்கடுக்கன் சோ 1 |
| 1646 | 2 | 14 | | பழயசுட்டோடு சோ 1 |
| 1650 | 3 | 7 | 04 | இ கல் கலாவரைக் குச்சுசோடி 1 |
| 1652 | 3 | 7 | | வே. குழல் காப்பு சோடி 1 |
| 1655 | 3 | 8 | | சிறு தங்கக் காப்பு சோடி 1 பூ இ |
| 1713 | 8 | 10 | 54 | சிறு செவ்வந்தித் தோடு சோடி 1 |
| 1739 | 9 | 15 | | கலாவரைமோதிரம் 1 |
| 1742 | 10 | 6 | | வே தண்டை சோ 1 |
| 1743 | 10 | 8 | | வே பாதசர் சோ 1 |
| 1767 | 11 | 18 | | சிறு சப்பக் காப்பு சோடி 1 |
| 1780 | 13 | 45 | | சிறு செயினட்டியல் 1 |
| 1835 | 17 | 8 | | இ கல் கலாவரைக் குச்சி சோடி 1 |
| 1879 | 20 | 6 | | வே பழைய பாதசரம் சோடி 1 |
| 1896 | 22 | 10 | | பழைய சிறு சவுக்கமணிக் கோர்வை 1 தி இ |
| 1910 | 24 | 8 | 04 | செவ்வந்தித் தோடு சோடி 1 |
| 2-ம் மாதம் | | | | |
| 1972 | 1 | 14 | 04 | தசி செவ்வந்தித் தோடு சோடி 1 |
| 1983 | 2 | 7 | | சிறு பென் தோடு சோடி 1 |
| 2016 | 5 | 8 | | இ கல் ஒல் கடுக்கன் சோடி 1 |
| 2017 | 6 | 40 | | செடிக்காப்பு1 முகப்பில்லை |
| 2022 | 6 | 18 | 04 | டி இ இகல் பதக் 1 |
| 2081 | 11 | 75 | | சங்கிலி அட்டியல் 1 |
| 2086 | 11 | 8 | | இ கல் முகப்பு சோடி 1 க இ |
| 2119 | 15 | 10 | | ஒட்டு வளையல் 4 |
| 2166 | 22 | 30 | 04 | வே பின்னுடன் பலவித மணி 45 |
| 2179 | 23 | 7 | | சிறு கலாவரை மோதிரம் 1 |
| 2207 | 27 | 12 | 04 | தோடு சோடி 1 |
| 3 ம் மாதம் | | | | |
| 2232 | 2 | 6 | | வளையல் " தகட்டுத் துண்டு 4 சிறுபென் துக்கு சோடி 1க 1இ |
| 2324 | 12 | 7 | | சவுக்கமணி 14 |
| 2338 | 13 | 13 | 04 | பொன்தோடு சோ 1 |
| 2346 | 14 | 13 | | செவ்வந்தித் தோடு சோடி 1 |
| 2353 | 15 | 6 | | கொப்புச் சிமிக்கி சோடி 1 சிமி 1 இ. |
| 2355 | 15 | 7 | | கொப்புச் சிமிக்கி சோடி 1 |
| 2419 | 21 | 12 | | கொப்புச் சிமிக்கி சோடி 1 |
| 2425 | 21 | 7 | | சிறு கொப்புச் சிமிக்கி சோடி 1 |
| 2439 | 23 | 15 | 04 | தங்க மோதிரம் 1 |
| 2443 | 24 | 9 | | இ கல் மோதிரம் 1 |
| 2457 | 27 | 15 | 04 | வெ கல் சிறு பென்டன் 1 |
| 2492 | 29 | 13 | 04 | வெ குழல் காப்பு சோடி 2 கு. இ வெ அடுக்குக் காப்புசோடி 2 கு இ தவாக் கூட்டுக் கோர்வை 2 |
| 2499 | 30 | 32 | | புசார்த்திமுடன் சிவமணி 4 சவுக்கமணி 16 |
| 4-ம் மாதம் | | | | |
| 2548 | 4 | 11 | | வெ பாதசரம்சோடி 1 |
| 2551 | 4 | 10 | | பழைய இ கல் கடுக்கன் சோடி 1 |
| 2671 | 12 | 10 | | பழைய பாதசரம் சோடி 1 |
| 2681 | 12 | 9 | 04 | சிறு பென் தோடு சோடி 1 |
| 2710 | 16 | 16 | 04 | வளையல் 8 |
| 2717 | 16 | 12 | 04 | செவ்வந்தித் தோடு சோடி 1 |
| 2721 | 16 | 60 | | செயின் அட்டியல் 1 டி இ |
| 2727 | 17 | 100 | 04 | தடம் 2 உடன் முறிச்சுக் குத்திக் கோடி 1 |
| 2742 | 18 | 7 | | வெ அடுக்குக் காப்பு சோடி 1 |
| 2769 | 19 | 8 | | இ கல் மோதிரம் 1 |
| 2770 | 19 | 20 | | சிறு அச்சுக்காப்பு 1 சு இ |
| 2794 | 20 | 6 | 54 | இ கல் சிறு பென் தூக்கு சோடி 1 |
| 2795 | 21 | 35 | 04 | பி இ ரெல்லிமணிக் கோர்வை 1-ல் மணி 34 |
| 2815 | 23 | 75 | | இ பத முறிச்சுக்குத்தி அட்டியல் ; |

விற்பனவு பிரமாதி வருடம் ஆடி மாதம் 7-ம் திகதிக்குச் சரியான (1939 ஆடி 23-ந் திகதி) ஞாயிற்றுக்கிழமைகாலை 8 மணி தொடக்கம் ஏடுபட்டநகை பிரதிங்கலாக மீதுதி மேற்படி கடையிற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

த. பாலசுப்பிரமணியம்

எ. த.

திரிகோணமலை 3-7-39

Mis 80 6—10-7-39

## தலைவலி திராப்பர் மருந்தைக் குடித்த யுவதி

### குணமடைந்து வருகிறுள்

பாணந்துறை, ஜூலை 2—

கொத்தலாவெலையில் தன் சகோதரருடன் வசித்துவந்த ஆலிஸ் எனும் 23 வயதுள்ள ஓர் அநாதப்பெண் செவ்வாய்க்கிழமை காலை வாயில்வரிவுபுண்களுடனும் வாந்தி அதிகுறிரு

№ 927

டனும் பாணந்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவள் ஆஸ்பத்திரியிற் பொலிஸாரிடம் வாக்குமூலம் கூறுகையில், தனது தலைவலிக்கு றப்பர்த்திராவகத்தை ஒருமருந்தாகக் குடித்ததாகத் தெரிவித்தாளாம். இப்பொழுது ஆஸ்பத்திரியில் இவர் குணமடைந்து வருகிறுள்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffn on Monday July 10 th 1939.